1250

OVED BY THE TEXT-BOOK COMMITTEE.

அரிச்சந்திரன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 SEP 1933
MADRAS

கெல்லெட் உயர்தரக் கல்லூரித் தமிழாசிரியர்
ம. க. ஜெயராம் நாயுடு அவர்கள்
எழுதியது

1268

...டிப் பிள்ளை கம்பெனி,
...கணி, சென்னை.

அரிச்சந்திரன்

OFFICE OF THE REGISTRAR OF
SEP 1933
MADRAS

கெல்லெட் உயர்தரக் கல்லூரித் தமிழாசிரியர்

ம. க. ஜெயராம் நாயுடு அவர்கள்

எழுதியது.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை]

[விலை அணா 5

Approved by the Text-Book Committee,

Vide Fort St. George Gazette, Page 615,

Dated 11th November, 1930.

59008

OFFICE OF THE REGISTRAR
1 SEP 1933
MADRAS

முன்னுரை

கற்போர் உள்ளத்தைப் பெரிதும் உருக்கி, மேன் மேலும் ஆர்வத்தைப் பெருக்கி, பொறை, வாய்மை, அன்பு முதலிய பல அரிய குணங்களை விளக்கிக் காட்டும் இணை யற்ற நூல்களில் அரிச்சந்திரன் கதை தலை சிறந்து விளங்குவது என்பது வெள்ளிடை மலை. இத்தகைய கதை களை எத்துணைப்புலவர்கள், எந்தெந்த முறையில் எவ்வெவ் வாறு எழுதினும் அவை யாவும் உலகிற்குப் பெரிதும் பயன் படுவனவே யாகும்.

இந்நூலாசிரியராகிய திரு. ஜெயராம் நாயுடு அவர்களைத் தமிழுலகம் பெரிதும் அறிந்திருக்கும். அவர் பல ஆண்டு களாகப் போதனு முறையில் பழகியவர்; பாடசாலைச் சிறு வர்களுக்கெனப் பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டு வருபவர். இவரால் எழுதப்பட்டுள்ள 'அரிச்சந்திரன்' என்னும் இவ்வரிய சிறுநூல், இளஞ்சிறுவர்கள் இன்போடு கற்க விழையும் முறையில், பழைய புராண வரலாற்றினைத் தழுவி, மிக எளிய நடையில் அழகுற எழுதப்பட்டுளது என்பது இப் புத்தகத்தை ஒருமுறை மேற்போக்காக நோக்குவோர்க்கும் நன்கு புலனுகும். ஆதலின் இதனைப் பலரும் தங்கள் பாடசாலைகளில் வைத்து ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி.

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	அரசாட்சியைப் பெறுதல் ...	5
2.	சந்திரமதியை இச்சித்தல் ...	8
3.	சந்திரமதியின் திருமணம் ...	16
4.	இந்திரசபையிற் சண்டை ...	28
5.	விசுவாமித்திரர் சூழ்ச்சி ...	35
6.	அரசன் நாட்டைத் துறந்து போதல்	46
7.	அரிச்சந்திரன் விலைப்படுதல் ...	57
8.	அரசன் சுடலை காத்தல் ...	61
9.	தேவதாசன் இறப்பு ...	65
10.	சந்திரமதியின் புலம்பல் ...	68
11.	இறந்த மகனை மன்னன் காணல் ...	78
12.	உண்மையினுடைய உயர்வு ...	84

ஸ்ரீ

அரிச்சந்திரன்

---

1. அரசாட்சியைப் பெறுதல்

பூவுலகத்துள்ள எல்லா நாடுகளிலும் மிக்க பெருமை படைத்தது நாம் வாழும் இந்த இந்திய நாடே யாகும். இந்நாட்டில் எல்லா வளப்பங்களும் நிரம்பியுள்ளன. இங்கு, வானோங்கி வளர்ந்த பல பெரிய மலைகளிருக்கின்றன. அம் மலைகளின் உதவியால் தக்க காலங்களில் மிக்க மழை பெய்கிறது. மலைகளின் அடிவாரங்களிற் பல நதிகள் உண்டாகி, எல்லாப் பக்கங்களிலும் பாய்ந்தோடி இந்நாட்டை மிக்க செழிப்புடையதாக்குகின்றன. நெல், கேழ்வரகு, கோதுமை முதலிய எல்லா உணவுப் பொருள்களும் இங்கு ஏராளமாய் விளைகின்றன. இவ்விடத்திற் பொன் வெள்ளி முதலிய விலையுயர்ந்த பொருள்களும் மிகுதியாகக் கிடைக்கின்றன. நமக்கு வேண்டிய உதவிகளைச் செய்தற்குரிய ஆடு மாடு முதலியனவும் நம் நாட்டிற் கணக்கின்றிப் பிறந்து வாழ்கின்றன.

மிக்க சிறப்பும் செல்வமும் படைத்த இந்நாட்டின் வடபாகத்தில் அயோத்தி யென்னும் அழகிற் சிறந்த பெரிய நகரம் ஒன்று இருக்கிறது. அந்நகரம் எல்லா வளப்பங்களும் பொருந்தியதாகும். பெரிய கோட்டையும், அரசர்கள் வாழ்தற்குரிய அழகிய அரண்மனைகளும், நீண்ட கோபுரங்களையுடைய பலகோயில்களும் அந்த நகரத்தில் இருந்தன. அங்கு, அந்தணர் தனியே வாழ்ந்திருப்பதற்குரிய நீண்ட தெருக்கள் பல இருந்தன. சேனைவீரர்கள் தங்கியிருப்பதற்குரிய இடமும், சேனைக்கு வேண்டிய யானைகள் குதிரைகள் முதலியன இருப்பதற்குரிய இடங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பல்லாயிர ஆண்டுகள் வரையிற் சூரிய குலத்திற் பிறந்த பல அரசர்கள், அந்த அயோத்தியைத் தலை நகரமாகக்கொண்டு, அங்கு வாழ்ந்திருந்து, இந்நாடு முழுவதையும் அரசாண்டார்கள். அவர்கள் அரசு புரிந்த காலத்தில் நம்முடைய நாடு கல்வி, அறிவு, ஒழுக்கம், நாகரிகம், செல்வம், கடவுளை வணங்குதல் முதலியவைகளில் மிகச் சிறந்ததா யிருந்தது. இந்நாட்டு மக்கள் எல்லாரும், அந்த அரசர்களைக் கடவுளர்களாக மதித்து, அவர்களுடைய ஆணைக்கு அடங்கி, மிக்க இன்பத்துடன் யாதொரு குறையு மின்றி வாழ்ந்திருந்தார்கள்.

அம்மன்னர்களும், தங்களுடைய குடிகளைக் கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்து, அவர்களுக்கு யாதொரு துன்பமும் நேராமல் காத்து, நீதி நெறியினின்று தவருமல் செங்கோல் செலுத்தி வந்தார்கள்.

உயர்ந்த குலத்திற் பிறந்த அந்த அரசர்களுள் திரிசங்கு என்பவர் ஒருவராவர். அவர் கோசல நாட்டை அரசாண்டு வந்தார். அவருக்கு அழகிய மகன் ஒருவன் பிறந்தான். அம்மைந்தனுக்கு அரிச்சந்திரன் என்னும் பெயரையிட்டு அவனுடைய பெற்ருேர், குலகுரு முதலியோர் மிக்க களிப்படைந்தனர். உருவத்திலும், அழகிலும், அறிவிலும் நாளுக்கு நாள் அரிச்சந்திரன், வளர்பிறைச் சந்திரனைப்போலச் செவ்வனே வளர்ந்துவந்தான். அவன், இளமையிலேயே தன்னுடைய தாய் தந்தையர்க்கும் ஆசிரியருக்கும் அடங்கியிருந்து, நன்ருகக் கல்வி கற்று, நல்லொழுக்கங்கள் எல்லாவற்றையும் உடையவனுக இருந்தான். தன்னுடைய குல குருவாகிய வசிட்ட முனிவரிடம் மிக்க அன்புடன் அடங்கி யிருந்து, அவருடைய சொல்லுக்கு மாறுபாடின்றி நடந்து, எல்லாக் கலைகளையும் நன்ருய்க் கற்ற பின்னர் அரிச்சந்திரன், தான் பிறந்த அரசகுலத்திற்குரிய யானை, குதிரை, தேர் முதலியவைகளின் மீதேறிச் சண்டை செய்தல், வெறுங் கால்களுடன் பூமியில் நின்று

மல் யுத்தம் செய்தல் முதலியவைகளிலும் மிக்க் தேர்ச்சி பெற்ருன் ; எப்பொழுதும் உண்மை யையே பேசும் உயர்ந்த குணத்தை மனத்தில் உறுதியாகக் கொண்டான். கனவிலும் பொய் பேசுதலில்லாத அந்த ஆண்மகனைக் கடவுள் என்றே சொல்லவேண்டுமல்லவா ?

தக்க வயதை யடைந்தவுடன் அரிச்சந்திர னுக்கு முடிசூட்டி, அரசாட்சியை அவனிடம் ஒப்புவித்து, மேலுலகத்தை யடைந்து, இன்பத் துடன் இருப்பதற்குரிய வழியைத் தேடச்சென் ருர் திரிசங்கு மன்னர். செங்கோலைக் கையிற் கொண்ட அரிச்சந்திரன், தன்னுயிரைப்போல் மற்றை எல்லா உயிர்களையும் மதித்துத், தன்னு டைய குடிகளுக்கு யாதொரு துன்பமும் அணு காமல் அரசாண்டு வந்தான். அந்தச் செங்கோல் வேந்தனுடைய ஆளுகையில் இவ்வுலகத் திருந்த மக்கள் எல்லாரும் மிக்க இன்பத்துடன் வாழ்ந்திருந்தார்கள். அத்தகைய நல்ல அரச னுடைய அரசாட்சிக்குட்பட்ட குடிகள், எப் பொழுதும் இன்பமே யடைந்திருப்பார்கள் என்பதில் ஐயமும் உண்டோ ?

---

2. சந்திரமதியை இச்சித்தல்

மிக்க திறமையுடன் அரிச்சந்திரன் செங் கோலோச்சி வந்த காலத்தில் ஒருநாள், அமைச்

சர், புரோகிதர், பண்டிதர், சேனைத்தலைவர் முதலி யோர் புடைசூழ அம்மன்னன் கொலுவீற் றிருந்து, தத்தம் இருப்பிடங்களுக்குச் செல்ல அங்கு வந்திருந்தவர் அனைவர்க்கும் விடை கொடுத்துத் தான் சிலருடன் தன்னுடைய அரண்மனைக்கு ஏகினான். மன்னன் அரண்மனைக் குள் புகுந்தவுடன் நீண்ட சடை முடிகளை யுடையவரும், மரவுரிகளை யணிந்தவரும், கைகளிற் கமண்டலங்களையும் குறுந்தடிகளையும் பிடித்தவருமாகிய முனிவர் சிலர், அரண்மனை யின் வாயிலை யடைந்து, உரத்த குரலுடன் அரசனை வாழ்த்திக் கடவுளைத் துதித்தனர். முனிவர் இட்ட குரலோசையைக் கேட்டு மன் னன், மனையின் வாயிலை யடைந்து, அங்கிருந்த முனிவரைக் கண்டு மிக்க களிப்படைந்து, கீழே விழுந்து அவருடைய திருவடிகளை வணங்கி னான். முனிவர் ஆசிகூறி அரசனை எழுப்பினர். அம்முனிவரை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று, தக்க மணைகளின் மீது இருக்கச்செய்து முகமன் கூறி, அவரை நோக்கி அரசன், "ஐயன் மீர், நீர் வந்தமையால் அடியேனுடைய அரண் மனை புனிதமாயிற்று. அடியேன் மிக்க பெருமை யடைந்தேன். புண்ணிய சீலரே, நீர் எந்தஎந்த நாடுகளைக் கண்டீர்? எந்தஎந்தப் புண்ணிய நதி களில் மூழ்கி வந்தீர்? நீர் சென்ற நாடுகள் தோறும் பார்த்த புதுமைகள் யாவை? அடி

யேன் அவற்றை யெல்லாம் அறிய விரும்பு கிறேன்,'' என்று வணக்கத்துடன் கேட்டான்.

முனிவர், "மன்னர் எல்லாரும் போற்றும் மா மன்னரே, யாம் பல நாடுகளிற் சென்று பல நதிகளில் நீராடினேம். இப்பெரிய உலகத்தில் அருமையான கன்னேசி நாட்டிற் கண்டகி என்னும் புனிதமான நதி ஒன்று உளது. சில நாட்களுக்கு முன்பு யாம் அந்த ஆற்றில் நீராடினேம்; உம்முடைய பெருமையைக் கேட்டு, உம்மைக்காண விரும்பி இங்கு வந்தோம். எம்முடைய வாழ்நாளில் யாம் புதுமைகள் பலவற்றைக் கண்டோம். அவற்றுள் இரண்டே மிகச் சிறந்தனவாம். அப்புதுமைகளுள் ஒன்று, கன்னேசி நாட்டில் இருப்பதாகும். மற்ருென்று, உம்முடைய நாட்டில் உள்ளதாகும். கன்னேசி நாட்டிற் கண்ட புதுமையாவது, அந்நாட்டுக்கு அரசனுகிய மதிதயன் பெருந்தவம் செய்து பெற்ற மகள் சந்திரமதியே யாம். அப்பெண்ணைப்போல் மிக்க அழகையுடைய ஒரு பெண்ணை யாம் இதுவரையில் எங்கும் கண்டிலோம். அப்பெண்மணியின் அழகு ஒருவராலும் நன்ருக எடுத்துச் சொல்ல முடியாததாகும். எல்லா உயிர்களையும் உண்டாக்கும் நான்முகக் கடவுள், அம்மாதை எவ்வண்ணம் வருந்திப் படைத்தனரோ? அவளுடைய அழகை எதற்கு ஒப்பிட்டு யாம்

சொல்வோம்! அழகெல்லாம் திரண்டு ஓர் உருக் கொண்டிருப்பதைப் போல் அக்கன்னி காணப் படுகிருள். நற்குண நற்செயல்க ளெல்லாவற் றையும் அவள் படைத்திருக்கின்ருள். அச்செல் வியைக் கண்டு மிக்க வியப்படைந்து, அந் நாட்டை விட்டுப் புறப்பட்டு இங்கு வந்தோம். இவ்விடத்தில் உம்மைப் பார்த்து யாம் மிக்க வியப்பும் விருப்பமும் கொண்டோம். எந் நாட்டிலும் உம்மைப் போன்ற ஓர் ஆண் அழ கனை எக்காலத்திலும் யாம் பார்த்திலோம். உம் முடைய அழகுக்கு ஏற்றவாறு உமக்கு மனைவியா யிருக்கத்தக்கவள் இவ்வுலகத்திற் சந்திரமதி ஒருத்தியே யாவள். அவளை நீர் மணம் புரிவீ ராயின் மிக நல்லதாகும். அப்பெண்ணரசி உம் மைக் கணவராக அடைந்து, கற்புடைப் பெண் களுக்குள் சிறந்து விளங்க அருள் புரியுமாறு கடவுளை யாம் வணங்குகின்ருேம். மன்னரே, பரமனுடைய அருளைப் பெற்று நீர் பல்லாண்டு இன்பத்துடன் வாழ்வீராக!'' என்று அரிச் சந்திரனைப் பார்த்துக் கூறினர்.

முனிவருடைய மொழிகளைக் கேட்டு அரிச் சந்திரன், மதிதயனுடைய மகளை மணக்க மிக்க விருப்பங் கொண்டான். அவன் முனிவரை நோக்கி, "முற்றும் துறந்த அறிஞரே, நீர் சொன்ன மங்கையர்க்கரசியை அடியேனுக்கு

மணம் செய்து கொடுக்க உதவிபுரிவதாக நீர் உறுதியாகக் கூறினால் என்னுடைய உடலில் உயிர் தங்கி யிருக்கும். அன்றேல், இப் பொழுதே என்னுடைய உயிர் நீங்கும் என்பது உண்மை யாகும்,'' என்றுரைத்தான். அங் ஙனம் கூறிய மன்னனைப் பார்த்து முனிவர், "வேந்தர் வேந்தே, முழுக் கலைகளுடன் கூடிய மதியைப் போன்ற முகத்தையுடைய அழகிற் சிறந்த சந்திரமதியை, நீர் மணம் புரிய யாம் என்ன உதவி செய்ய வேண்டும்?'' என்று கேட்டனர்.

அதற்கு அந்த அரசன், "பெரியவரே, நீர் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, மலைகளையும் காடுகளையும் ஆறுகளையும், பாலைவனங்களையும் கடந்து சென்று, சந்திரமதியின் தந்தையைக் கண்டு, அவனுடைய செல்வப் பெண்ணை எனக்கு மணம் செய்துகொடுக்குமாறு பேசி முடித்துத் திரும்பி அடியேனிடம் வர உம்மை வேண்டுகின்றேன். நீரே எனக்குத் தாய் தந்தை குரு தெய்வம் முதலிய எல்லாரு மாவீர். உம்மை யன்றி வேறு யாவர் அடியேனுக்குத் திருமணம் செய்து களிக்கப் போகின்றனர்?'' என்று பணிவுடன் முனிவரைப் பார்த்துச் சொல்லி வேண்டினான்.

அளவற்ற மகிழ்ச்சியுடன் அந்த முனிவ ரெல்லாரும் எழுந்து, அரசனை நோக்கி, "திரு

மாலைப் போன்ற சிவந்த வாயையுடைய செல்வரே, நீர் சொன்ன வண்ணம் யாம் கன்னோசி நாட்டை நாடிச் சென்று, மதிதயனைக் கண்டு பேசித் திரும்பி இவ்விடம் வருகின்றோம். உம்முடைய திருமணக் கோலத்தைக் காண யாமும் மிக விரும்புகின்றோம். உமக்குத் திருமணம் முடித்துவைப்பதைக் காட்டிலும் எமக்கு வேறொரு நன்மை யாது உளது?'' என்று சொல்லி, அம்மன்னனுக்கு ஆசி மொழிந்து, அவ்விடத்தை விட்டு வெளியே சென்றனர். முனிவர் அகன்றவுடன் அரிச்சந்திரன், அவ்விடத்தினின்று தனியே சென்று, படுக்கையறையை யடைந்து, நல்லதொரு மெத்தையின் மீது படுத்துச் சந்திரமதியை மணப்பதைப் பற்றிப் பலவாறு நினைந்து மனமுருகினான்.

கன்னோசி நாட்டை நாடிச்சென்ற முனிவர் விரைந்து நடந்து, சிலநாட்களுக்குள் அந்நாட்டை யடைந்து, மதிதயன் அரண்மனையை யணுகினர். அரண்மனையின் வாயிலைக் காத்திருந்தவரால் முனிவர் வரவை யறிந்த அம் மன்னன், அப்பொழுதே அரண்மனையின் வாயிலை யடைந்து, முனிவருடைய அடிகளை வணங்கினான். அரசனைப் பன்முறை வாழ்த்தினர் முனிவர். உடனே முனிவரை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று, உயர்ந்த மணைகளின் மீது உட்காரச்செய்து, அவரை நோக்கி வேந்தன்,

“ பெருந் தவத்தைச் செய்த புனிதரே, சில நாட்களுக்கு முன்னர், பலவகை மணிகளை அலைகள் தோறும் கரைகளில் வீசி யெறிகின்ற கண்டகி யாற்றில் நீராடி என்னை ஆசீர்வதித்துச் சென்ற நீர், விரைவில் இங்குத் திரும்பி வந்ததேன்?” என்று கேட்க, அதற்கு அம்முனிவர் அரசனைப் பார்த்து, “ஒளிவீசும் உயர்ந்த மணிகளால் இழைத்த முடியை யுடைய அரசரே, உம்முடைய நாட்டினின்று புறப்பட்ட யாம், அயோத்தியை யடைந்தோம்; அங்கிருக்கும் அரிச்சந்திரன் என்னும் செங்கோல் வேந்தனைக் கண்டு, அவனிடம் உம்முடைய புத்தி கூர்மை, செங்கோலின் திறமை, நாட்டின் வளப்பம் முதலியவற்றைப் பற்றியும், நீர் பெற்ற அரிய மகளாகிய சந்திரமதியின் அழகைக் குறித்தும் சொன்னோம். அவற்றைக் கேட்ட அந்த அரசன், உம்மிடம் மிக்க விருப்ப முடையவனானான்; உம்முடைய மகளை மணக்க எண்ணங் கொண்டான். அறநெறிக் கிணங்க அம்மன்னனுடைய எண்ணத்தின்படி செய்தல் நலமேயாம். செல்வத்தில் மிக்க வேந்தரே, இந்நிலவுலக முற்றும் யாம் திரிந்து பல அரசரைக் கண்டோம். அரிச்சந்திரனைப் போன்ற சிறந்த ஓர் அரசன் எங்கும் இலன். பரமசிவனுடைய அருளால் நீர் பெற்ற மகளுக்கு அவன் ஒருவனே தக்க கணவனாவான். ஆதலின், உம்

முடைய செல்வப் புதல்வியை அவ்வரசிளங் குமரனுக்கு மணம் செய்ய விரும்பி இங்கு வந்தோம்,'' என்று கூறினர்.

நற்குண நற்செயல்களையுடைய முனிவர் உரைத்த மொழிகளைக் கேட்டு மிக்க களிப்படைந்த மதிதயன், "பார்வதியின் கணவன் முன்னுளிற் சொன்ன தகுதிக்கு மாறுபட நான் எப்படி நடக்கக் கூடும்!'' என்று தன் மனத்தில் எண்ணித் திகைத்து, முனிவரைப் பார்த்து, "என்னுடைய மகளின் திருமணத்தைப் பற்றிச் சிவபெருமான் அருளிய இரகசியம் ஒன்று உண்டு. அதை யறியக் கூடியவரே என் அருமைக் குழந்தைக்குக் கணவராகத் தக்கவர். ஆதலால், அரிச்சந்திரனை இங்கு வரச் செய்வீர். கடவுள் அருளிய இரகசியத்தை அவ்வரசன் அறியக் கூடுமா என்பதைக் காணலாம்,'' என்று மொழிந்தான். தாம் உட்கார்ந்திருந்த மணைகளை விட்டெழுந்து, "நீர் சொன்ன வண்ணமே செய்யலாம். அரிச்சந்திரனுக்குக் கடவுள் அருளால் மங்களமே யுண்டாகும். நீரும் நன்மையை யடைவீர். யாம் அயோத்தி சென்று, அரிச்சந்திரனை யழைத்து வருகின்றோம்,'' என்று மதிதயனைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியுடன் கூறி, அவ்விடத்தை விட்டு அகன்றனர் முனிவர்.

3. சந்திரமதியின் திருமணம்

முனிவருடைய மொழிகளைக் கேட்டுச் சிறிது நேரம் ஆழ்ந்த கருத்துடன் சந்திரமதியின் மணத்தைப்பற்றி ஆராய்ந்து பார்த்த மதி தயன், தன்னுடைய மகளுக்குச் சுயம்வர மணம் அன்றைக்கு ஏழாவது நாள் நடக்கப்போகிறதென்று சொல்லி, இப்பெரிய பூமியிலிருந்த எல்லா அரசர்களுக்கும் திருமண வோலையும் தூதும் அனுப்பினான். அந்த அரசன் கட்டளையை யேற்றுச் சென்ற தூதர், விரைந்து பல நாடுகள் தோறும் போய்த் திருமணச் செய்தியைச் சொன்னவுடன், ஆங்காங்கிருந்த பல அரசிளங் குமரர், அளவற்ற மகிழ்ச்சியுடன் தம் நாடு நகரங்களை விட்டு நீங்கிப் பலவகைச் சேனைகளுடன் கன்னோசி நாட்டை நாடிவரத் தொடங்கினர். தூதர் சென்ற இரண்டு மூன்று நாட்களுக்குள் கணக்கற்ற அரசர்கள், தேர் யானை குதிரை முதலிய படைகளுடன் கன்னோசியை யடைந்து, அங்கிருந்த பெரிய சோலைகளிலும், நல்ல தண்ணீர் நிரம்பி யிருந்த குளக் கரைகளிலும், கடவுள் கோயில்களின் பக்கங்களிலும், பெண்கள் ஆடுதற்கெனக் கட்டிய அழகிய நாடக சாலைகளிலும், மடங்களிலும், பசும்புல் நிறைந்திருந்த வெளிகளிலும் தங்கினார்கள்.

மதிதயனிட மிருந்து புறப்பட்ட முனிவர், கால்கள் நோவ விரைவாக நடந்து, சில நாட்களுக்குள் அரிச்சந்திரனுடைய அரண்மனையை யணுகினர். முனிவர் வரவை யறிந்த அவ்வேந்தன், உடனே அவரிடம் வந்து வணங்கிச் செய்தியை வினவினுன். அவனை நோக்கி முனிவர், "கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்திற் பெருந்தவத்தைச் செய்தவர் நீரே யாவீர். சந்திரமதியை மணக்க உம்மைவிடச் சிறந்தவர் யாவர் இருக்கின்றனர்? அம்மாதரசியை உமக்கு மணம் செய்து கொடுக்க, அவளுடைய தந்தை விருப்பங் கொண்டுள்ளான். ஆதலின், உடனே புறப்பட்டு எம்முடன் கன்னேசிக்கு வரக்கடவீராக," என்று சொல்லினர்.

அச்சொற்களைக் கேட்ட அரிச்சந்திரன் அளவு கடந்த மன மகிழ்ச்சியை யடைந்தான். அப்பொழுதே அவன், தன்னுடைய தேருடன் நால்வகைப் படைகளும் அரண்மனை வாயிலில் வந்திருக்க ஏவலரிடம் கட்டளையிட்டு, அரண்மனைக்குட் சென்று, உயர்ந்த ஆடைகளாலும் அணிகலன்களாலும் தன்னை அழகு படுத்திக் கொண்டு, ஆசாரவாயிலை யடைந்தான்; அங்கிருந்த ஏவலரை நோக்கி, "இந்நாட்டிலுள்ள சிற்றரசர்கள், அமைச்சர்கள், நாடகப் பெண்கள் முதலோர்கள் சேனைகளுடன் புறப்பட்டுக் கரும்புகள் விளைகின்ற அழகிய வயல்களை

வேலிகளாக வுடைய கன்ஞேசி நாட்டை நோக்கி விரைந்து நடக்கச் சொல்லுவீர். யான் அந் நாட்டு அரசனுடைய செல்வ மகளை மணம் புரியச் செல்கின்றேன்,'' என்றுரைத்துக் கட்டளை யிட்டான். ஏவலர் ஓடிச் சென்று அந்நகர மாந்தர் அனைவர்க்கும் அரசனுடைய கட்டளையை யறிவித்தனர். மன்னன் ஆணையைக் கேட்டு அந்நகர மக்கள் எல்லாரும், அப்பொழுதே புறப்பட்டுப் பெருமகிழ்ச்சியுடன் கன்ஞேசியை நோக்கி நடந்தார்கள்.

அழகிய பெரிய குதிரைகளைப் பூட்டப் பெற்று அரண்மனையின் வாயிலில் வந்திருந்த தன்னுடைய உயர்ந்த தேரில் அயோத்தி வேந்தன், முனிவருடன் ஏறி யமர்ந்தான். அவனுடைய குலகுருவாகிய வசிட்ட முனிவரும், அமைச்சர் பலரும் அழகிய பல்லக்குக்களில் ஏறி யுட்கார்ந்தனர். மிக விரைவாகச் சாரதி தேரை யோட்டினன். மங்கள வாத்தியங்கள் முழங்கின. நால்வகைச் சேனைகளும் அத்தேரைப் பின்பற்றிச் சென்றன. அந்நகர மாந்தர் பலரும், அரிச்சந்திரன் ஏறிச் சென்ற தேருக்கு முன்னும் பின்னுமாகப் பலவகைப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் சென்றனர்.

பல மலைகளையும் ஆறுகளையும் சோலைகளையும் விரைவில்கடந்து, வெப்பம் மிகுந்ததொரு பாலை

வனத்தின் எல்லையை யடைந்தான் அரிச்சந்திரன். அங்குக் காளியின் கோயில் ஒன்று இருந்தது. அக்கோயிலின் முன்னர், கல்லாலாகிய தேரும், குதிரைகளும், வில்லும், அம்புகளும் இருந்தன. அவற்றைக் கண்டு அரிச்சந்திரன் மிக்க வியப்படைந்தான். தன்னுடைய தேரை விட்டிறங்கி அவன், காளி கோயிலின் வாயிலிற் சென்று, கீழே விழுந்து அத்தேவியின் திருவடிகளை வணங்கித் துதித்து எழுந்தான்; கற்றேர் இருந்த பக்கம் திரும்பிப் பார்த்தான். கற்றேரும் கற்குதிரைகளும் கல்லாயிருந்த வில் அம்புகளும், பொற்றேரும் பொற்குதிரைகளும் பொன்னுலாகிய வில் அம்புகளுமாக மாறி யிருக்கக் கண்ட அம்மன்னன், "ஆ! ஈதென்ன புதுமை? காளி தேவியின் செயலை என்னென்று சொல்லுவேன்! வியப்பு! வியப்பு!" என்று சொல்லி, மதி மயங்கி நின்றான்.

அப்பொழுது காளி தேவி அருளுருக் கொண்டு, கோயிலின் வெளியில் வந்து, அரிச்சந்திரனை நோக்கி, "அரசே, உனக்கு மங்கள முண்டாகுக! நீ பார்த்து வியப்படைந்த இதோ நிற்கின்ற தேரும் குதிரைகளும் வருண தேவனுக்குச் சொந்தமானவைகளாகும். இப்பொழுது இருப்பதைப் போலவே முன்னாளில் இவை பொன்னுலாகியவைகளா யிருந்தன. ஒரு காலத்தில் வருண தேவன் இவற்றை இங்குக்

கொண்டுவந்து விட்டு, எவரும் இவற்றைத் திருடிச் செல்லா வண்ணம் கல்லாலாகிய வைகளாய் இருக்கச் செய்து, என்னை நோக்கி, ‘இத்தேர் முதலியவற்றை உள்ளவாறே பொன்னுருவாயிருக்கக் காண்பவரே இவற்றை யடைதற்கு உரியவராவர்,’ என்று கூறிச் சென்றான். பல ஆண்டுகளாக இவை, இங்குக் கல்லாலாகிய வைகளாய்க் கிடந்தன; இப்பொழுது உன்னுடைய கண்களுக்குப் பொன்னாலாகியவைகளாய்க் காணப்பட்டன. ஆதலின், இத்தேர் குதிரைகள் முதலியன உனக்குச் சொந்தமாயின. யாதொரு தடையுமின்றி நீ இவற்றைக் கைப்பற்றிச் செல்வாயாக,’’ என்று கூறினாள்.

அம் மொழிகளைக் கேட்டு அரிச்சந்திரன் மிக்க களிப்பை யடைந்தான்; காளி தேவியைப் பலவாறு புகழ்ந்து துதித்தான். அத் தேவியும் அவனை வாழ்த்தி மறைந்தாள். கடவுள் அருளால் கிடைத்த பொற்றேரின் மீது அரிச்சந்திரன் ஏறி யுட்கார்ந்து, தன்னுடைய சேனைகள் புடை சூழக் கன்னமாபுரியை நோக்கி அத் தேரை விரைவாகச் செலுத்தினான். அந்தத் தேர் காற்றினும் கடிது சென்று அன்று மாலைப் பொழுதில் கன்னேசியை யணுகிற்று. அன்றிரவைக் கழிக்கக் கன்னமாபுரியில் தக்கதோர் இடத்தில் அரிச்சந்திரன், தன்னுடைய சேனைகளுடன் தங்கினான். சூரியனும் மேல்கடலில் மூழ்கினான்.

அன்றிரவின் முடிவில், 'எல்லாரும் சந்திரமதியின் திருமணத்தைக் காண விரைவில் வாரும்,' என்று அழைப்பதே போலச் சேவல்கள் கூவின. சிறிதுநேரம் கழிந்தபிறகு பொழுது புலர்ந்தது. தன் குலத்தில் தோன்றிய அரிச்சந்திரனுக்கே சந்திரமதியை மணம் செய்வித்துக் களிக்க வேண்டும் என்னும் கருத்துடன் விரைந்து வருவான்போலக் கதிரவன், கிழக்குத் திக்கில் தோன்றி மேலெழுந்தான்.

திருமணத்தை நாடிக் கன்னமாபுரியில் வந்திருந்த அரசர்களெல்லாரும், விடியற்காலத்தில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு உயர்ந்த பட்டாடைகளையும், பசும் பொன்னுலாய பலவகை நகைகளையும், முத்து மாலைகளையும், உயர்ந்த மணிகளால் இழைத்த முடிகளையும் அணிந்து, மணக் கோலத்துடன் சுயம்வர மண்டபத்தை யடைந்தார்கள். அங்கு அவர்களுக்கென அமைத்திருந்த பொன்மயமான உயர்ந்த நாற்காலிகளின்மீது தனித் தனியே மிக்க அழகுடன் உட்கார்ந்தார்கள்.

சந்திரமதியின் தோழிகள், தங்கள் நாயகியைக் கங்கை முதலிய புனித நதிகளிலிருந்து கொணர்ந்த தண்ணீரால் நீராட்டி, அழகுக்கு அழகு செய்வதே போல் அம்மங்கைக்குப் பொற்சரிகைகளால் நெய்தவிலையுயர்ந்த சிறந்த ஆடை

களைக் கட்டி, பலவகையான உயர்ந்த நகைக் ளைப் பூட்டி, பொற் குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்ப்பதைப் போல நெற்றியிற் சிவப்புப் பொட் டொன்று இட்டார்கள். அப்பெண்கள், திருமக ளைப்போன்ற சந்திரமதியை முன்னும் பின்னும் பற்றி மெல்ல நடத்தி யழைத்துக்கொண்டு சுயம் வர மண்டபத்தைச் சேர்ந்தார்கள். கொத்துக் கொத்தாக நிரம்பப் பூக்கள் பூத்த பூங்கொடி யைப் போலக் கையிற் பூமாலை யேந்தி யசைந்து நடந்து திருமண மண்டபத்தை யடைந்த சந்தி ரமதியின் பேரழகைக் கண்டு, அம் மண்டபத்தி லிருந்த அரசர்க ளெல்லாரும் மிக்க வியப்பை யடைந்தார்கள்; 'இந்தக் கட்டழகி யாருக்கு மாலை சூட்டுவாளோ!' என்று எண்ணி யேங்கி னார்கள்.

தோழிகள், அந்தச் சுயம்வர மண்டபத்தி லிருந்த அரசிளங்குமரரைத் தனித்தனியே தங் கள் நாயகிக்குச் சுட்டிக் காட்டி, அவரவருடைய பெயர், நாடு, குலமுறைமுதலியவற்றைக் குறித்து விளங்க உரைத்தார்கள்; அன்னப் பறவையைப் போன்ற சந்திரமதியை மெல்ல அழைத்துக் கொண்டு அரிச்சந்திரன் முன்னிலையை யடைந் தார்கள்; அந்த அரசனுடைய குலத்தின் உயர்வு, நாட்டின் சிறப்பு முதலியவற்றைப் பற்றிச் சந் திரமதிக்கு விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

மீன்மதனைப் போல் வீற்றிருந்த கோசல நாட்டுக் கோமானைச் சந்திரமதி நன்ருக உற்றுப்பார்த் தாள். அப்படிப் பார்த்த கட்டழகியை அரிச்சந் திரனும் ஏற இறங்கப் பார்த்து, அவள் அழ கைக் கண்டு மிக்க வியப்பை யடைந்தான்; அவ ளுடைய கழுத்தில் தாலி யொன்றிருக்கப் பார் த்து மதி மயக்கங் கொண்டான்; அவளை மணக் கக் கொண்டிருந்த விருப்பத்தை விட்டொழித் தான். உடனே அவ்வேந்தன், தான் உட்கார்ந் திருந்த நாற்காலியை விட்டெழுந்து நின்று, மிக்க சினத்துடன் மதிதயனை நோக்கி, "செங் கோல் அரசரே, நீர் செய்த வேலை மிக நன்ரு யிருக்கிறது! இங்கு வந்திருக்கும் என்னைப் போன்ற அரசிளங் குமரர் எல்லாரையும் ஏமா ற்ற எத்தனை நாட்களாக எண்ணியிருந்தீர்? உம் முடைய மகளைக் கன்னி என்றே இதுவரையில் நாங்க ளெல்லாரும் எண்ணி யிருந்தோம். உம்முடைய பெண்ணின் கழுத்தில் மங்கலக் கயிறு விளங்குகின்றதே! முன்னரே ஒருவனை மணந்திருக்கும் இவள், இப்பொழுது எப்படி மற்ருெருவரை மணக்கக் கூடும்? நீர் எப்படி இவளுக்குச் சுயம்வர மணம் நடத்தத் துணிந் தீர்? உம்முடைய செயலை என்னென்று சொல்ல லாம்!" என்று கடிந்து, அந்த மண்டபத்தி லிருந்த அரசர்க ளெல்லாருக்கும் நன்ருகக் கேட்கும்படி உரத்த குரலுடன் கேட்டான்.

அச்சொற்களைக் கேட்டு மதிதயன், அளவற்ற மன மகிழ்ச்சியை யடைந்தான். ஆயினும் அவன், தான் கொண்ட களிப்பை வெளியிற் காட்டாமல், அங்கிருந்த எல்லா அரசர்களையும் பார்த்து, "அரசகுலச் செல்வர்காள், இப்பொழுது அயோத்தி மன்னன் கூறிய மாற்றம் மெய்யா யிருக்குமா? பொய்யா யிருக்குமா? நன்ருகப் பார்த்துச் சொல்லுங்கள்," என்று சொன்னான். மதிதயன் உரைத்த மொழிகளைக் கேட்டு மன்னர்களெல்லாரும், "இஃதென்ன புதுமை! அரிச்சந்திரன் கூறிய வண்ணம் சந்திரமதியின் கழுத்தில் தாலியைக் காணேமே? அம்மங்கையின் கழுத்தில் மங்கல நாண் ஒன்று இருப்பது உண்மையாயின், அதை அரிச்சந்திரனே கையிற் பிடித்துக் காட்டக் கடவன்," என்று சொன்னூர்கள்.

உடனே மதிதயன், மிக்க புன்சிரிப்புடன் அரசிளங் குமரர் எல்லாரையும் நோக்கி, "அறிவிற் சிறந்த குல மன்னர்களே, புண்ணிய சீலனுகிய அயோத்தி மன்னன் சொன்னது உண்மையேயாகும். சிவபெருமானைக் குறித்து யான் அருந்தவம் புரிந்து சந்திரமதியைப் பெற்றேன். அக்காலத்திற் சிவபெருமான் அருளிய இரகசியம் ஒன்று உளது. அஃதாவது, 'சந்திரமதியின் கழுத்தில், அவளுடன் தோன்றிய மங்கலக் கயிறு ஒன்று உளது. அதை

எந்த ஆண்மகன் கண்டறிந்து சொல்லு கின்றானோ அவனே அந்தச் சந்திரமதிக்கு மணாளனாகத் தக்கவன்,' என்பதே யாகும். சந்திரமதிக்குக் கணவனாகத் தக்கவனுடைய கண்களுக்கன்றி மற்றையோருடைய கண் களுக்கு அந்தத் தாலி காணப்படாததாகும். அத்தாலிக் கயிற்றைக் கண்ணாடி நிழலிற் காண லாம். அதைக் கையினால் பிடித்துக் காட்ட எவ ராலும் இயலாது,'' என்று கூறினான். அம் மொழிகளைக் கேட்ட எல்லா அரசிளங் குமரர்க ளுடைய மனங்களும் சோர்வடைந்தன.

அப்பொழுது, தான் முன்னரே மணக்க எண்ணி யிருந்த அரிச்சந்திரனை மனத்திற் கொண்டு, தன்னுடைய கையிலிருந்த மண மாலையை வானில் எறிந்தாள் சந்திரமதி. அஃது அரிச்சந்திரனுடைய அகன்ற மார்பில் விழுந்து அழகுடன் விளங்கியது. அதைப் பார்த்துச் சந்திரமதி, களிப்பென்னும் கடலில் மூழ்கித் தன்னை மறந்து நின்றாள். அவளு டைய தந்தையும் அங்ஙனமே யாயினான். அரிச்சந்திரன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. அவனுடைய முகம் இளஞ் சூரியனைப்போல் விளங்கியது. மற்றை அரசர் களுடைய முகங்கள், சூரியனுடைய ஒளியின் முன்னர் நின்ற சந்திரனைப்போல் வாட்ட முற்றன. அயோத்தியி லிருந்து அரிச்சந்தி

ரனைத் தொடர்ந்துவந்தமுனிவர் முதல் பலரும், பெருமகிழ்ச்சி கொண்டு மிக்க ஆரவாரஞ் செய்தனர்; தம்முடைய மன்னனும் அவன் மனைவியும் நீண்ட காலம் இன்பத்துடன் வாழ்ந் திருக்க அருள் புரியுமாறு கடவுளை வேண்டித் துதித்தனர்; பல்லாண்டு பாடினர்; துள்ளிக் குதித்து ஆடினர். எல்லாருடைய காதுகளும் செவிடு படும்படி அந்தக் கன்னமாபுரி முற்றி லும் பலவகை மங்கல வாத்தியங்கள் முழங் கின. அந்நகரத்திலிருந்த பலதிறத்துப் பெண் களும், வீணை முதலிய இசைக் கருவிகளைக் கொண்டு பலவகைப் பாட்டுக்களைப் பாடினார்கள். அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் மதிதய னுடைய அரண்மனைக்குள் சந்திரமதியின் தோழிகள் அழைத்துச் சென்றார்கள். அரண் மனையில் நடந்த களியாட்டம் யாதினும் பெரிதா யிருந்தது.

நல்ல தொரு நாளிற் பலவகை வாத்தியங் கள் முழங்க மதிதயன் அரண்மனையில் அரிச் சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் மிக்க சிறப் புடன் திருமணம் நடந்தேறியது. உடலும் உயிரும்போல் அந்த மணமக்கள் இருவரும், மிக்க அன்புடன் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாமல் சில நாட்கள் வரையில் கன்னமா புரியிலேயே தங்கி யிருந்தனர். பின்னர், மதிதய மன்னனிடம் விடை கொண்டு அரிச்சந்திரன்,

தன்னுடைய மனைவியுடன் புறப்பட்டு அயோத்தியை நோக்கிச் சென்றான். அங்ஙனம் சென்ற போது, வழியில் நேர்ந்த பற்பல சிறப்புக்களையும் அம்மன்னன் தன்னுடைய மனைவிக்கு விளங்கச் சொல்லிக் கொண்டே போனான். அந்த மணமக்க ளிருவரும் அயோத்தி நகரத்தை யடைந்தவுடன் பலவகை மங்கள வாத்தியங்கள் ஒலித்தன. அந்நகர மாந்தர் அனைவரும், மன்னனை எதிர் கொண்டு அழைத்துச் செல்லப் பெருந் திரளாகக் கூடி வந்தனர்; மணக் கோலத்துடனே அரசனையும் அரசியையும் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். புலவர் பலரும், அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் வாழ்த்தினர். அந்தணர் பலரும், அந்த மணமக்களுக்கு ஆசி மொழிந்தனர்.

மலரும் மணமும்போல் அரிச்சந்திரனும் சந்திரமதியும் ஒருமனப் பட்டு, மிக்க இன்பத்துடன் தம்முடைய அரண்மனையில் வாழ்ந்து வந்தனர். சில மாதங்களுக்குப் பின்னர் சந்திரமதி ஓர் ஆண் மகனைப் பெற்றாள். தனக்கு ஆண் குழந்தை பிறந்ததைக் கேட்டு அரிச்சந்திரன், பலவகைத் தானங்களைக் கொடுத்தான். அப்பிள்ளைக்குத் தேவதாசன் என்னும் பெயரை யிட்டுப் பெற்றோர் மிக்க களிப்பை யடைந்தனர்; அம் மைந்தனைச் செவ்வனே வளர்த்து வந்த

னர். தேவதாசன், நாளுக்குநாள் நன்ருக வளர்ந்து, தன்னுடைய தாய் தந்தையர் மகிழ மழலைச் சொற்களைப் பேசி, மடநடை நடந்து, விளையாடி வாழ்ந்து வந்தான். அங்ஙனம் ஏழு ஆண்டுகள் சென்றன.

4. இந்திரசபையிற் சண்டை

எண்ணியவற்றை யெல்லாம் தரக்கூடிய பொன்மயமான மரங்களையுடையதும், பசி பிணி கிழத்தன்மை இறப்பு என்பவைகள் இல்லாததுமான பொன்னுட்டின் பெருமை, ஒருவராலும் உள்ளவாறு எடுத்துச் சொல்ல இயலாததாகும். மிக்க சிறப்புடைத்தாய அந்நாட்டின் நடுவில் அமராவதி என்னும் அழகில் மிக்க நகரம் ஒன்று உளது. அதைப்போன்ற சிறந்த நகரம் ஒன்று, எந்த உலகத்திலும் இலது. ஒப்பற்ற பெருமை படைத்த அந்நகரத்தின் மத்தியில் பொன்மயமான நிலத்தில், வைடூரியக் கற்களால் கட்டிய சுவர்களையும், மரகதத்தாலாகிய தூண்களையும், பவளப் போதிகைகளையும், வைரத்தால் செய்த தூலங்களையும், பதுமராகத்தால் வேய்ந்த முகட்டையும் உடைய சித்திர மண்டபம் ஒன்று உளது. மேலுலகத்திற்கு அரசனாகிய இந்திரன் கொலு வீற்றிருக்கும் மண்டபம் அஃதேயாகும். அம் மண்டபத்தின் பெயர், சுதன்மை என்று அனைவரும் சொல்லுவர்.

ஒரு நாள் இந்திரன், கோடி சூரியர்கள் ஒன்று சேர்ந்து விளங்கும் தன்மைத்தாய தன்னுடைய முடியை யணிந்து, தன் மனைவி இந்திராணியுடன் சுதன்மையை யடைந்து, அங்குத் தனக்கென அமைந்திருந்த உயர்ந்த சிங்காசனத்தின் மீதேறிக் கொலு வீற்றிருந்தான். அவ்வேளை, தேவர்கள் முனிவர்கள் முதலிய பலபெரியார்களும் அம்மண்டபத்தையடைந்து, இந்திரனுடைய இணையடிகளை வணங்கி, அவன் கொலு வமர்ந்திருந்த அழகைக் கண்டுகளித்து அமர்ந்தார்கள். பொன்னாட்டின் இன்பங்களைப் பற்றிக் கேட்டு மன மகிழ்ந்த பின்னர் இந்திரன், தன் எதிரில் உட்கார்ந்திருந்த வசிட்டர் விசுவாமித்திரர் முதலிய முனிவர்களை நோக்கி, "மக்களின் மிக்க மாதவ முனிவர்காள், அடியேன் விண்ணப்பம் ஒன்று உளது. அஃது யாதோவெனின், 'கடலால் சூழப்பட்ட பூவுலகத்திலுள்ள அரசர்களுள், தாம் ஆளுகின்ற நாட்டிற் பாவங்கள் உண்டாகா வண்ணம் செங்கோல் செலுத்துதல், தம்முடைய குடிகளை யாதொரு துன்பமும் அணுகாமல் காத்தல், எப்பொழுதும் மெய்யே பேசுதல், எல்லாக் கலைகளையும் நன்ருகக் கற்று அவற்றிற் கூறிய வண்ணம் நடத்தல் முதலிய நற்குண நற்செயல்களையுடைய பெரியார் யாரேனும் உளரோ' என்பதேயாம்" என்று கேட்டான்.

இந்திரனுடைய வாய் மொழியைக் கேட்டு முனிவர்கள் எல்லாரும் சிறிது நேரம் ஆழ்ந்த கருத்துடன் இருந்தார்கள். அப்பொழுது, தெய்வத்தன்மை பொருந்திய வசிட்ட முனிவர் எழுந்து, தேவராசனைப் பார்த்து, "அமரர் வேந்தே, நீர் கேட்டதற் கிணங்கச் சூரிய குலத்தில் தோன்றிய அரிச்சந்திரன் என்னும் சிறந்த அரசன் ஒருவனே நில வுலகின்கண் இருக்கின்ருன். அவனைப் போன்ற உயர்ந்தவன் ஒருவன் எந்த உலகத்திலும் இலன். அந்த அரசன், பிறருடைய மனைவியைத் தன் உடன் பிறந்தவளாக எண்ணுகின்றவன்; நீதியினின்று சிறிதும் தவருமல் செங்கோல் செலுத்தித் தன்னுயிரைப் போல் எல்லா உயிர்களையும் மதித்துக் காப்பவன்; எக்காலத்திலும் உண்மையே பேசும் ஒப்பற்ற குணமுடையவன்; மிக்க தோள் வன்மை யுடையவன்; சண்டை செய்து பகைவரை வெல்லுதலில் வல்லவன்; எல்லாக் கலைகளையும் நன்ருகக் கற்றவன்; கற்றவண்ணம் நடப்பவன்; பொறுமையில் மிக்கவன்," என்று சொன்னர்.

வசிட்டரிடம் விசுவாமித்திரருக்குப் பகையுண்டு. முன்னொரு காலத்தில் விசுவாமித்திருடைய மைந்தர்கள் வசிட்டரைத் துன்புறுத்திஞர்கள். அதனுல் மிக்க கோபங்கொண்ட வசிட்டர் அம்மைந்தர்களைச் சபித்துச் சாம்பலாக்

கினர். அதையறிந்த விசுவாமித்திரர், வசிட்டரை யெதிர்த்துப் பெரும் சண்டை செய்யத் தொடங்கினர். அப்பொழுது வசிட்டர், தம்முடைய கையிலிருந்த தண்டை விசுவாமித்திரருக்கு எதிரில்நாட்டினர். விசுவாமித்திரர் விட்ட அம்புகள்எல்லாவற்றையும் அத்தண்டுவிழுங்கி, விசுவாமித்திரரைத் தோல்வியடையச் செய்தது. அதைக்கண்ட விசுவாமித்திரர், "வசிட்டர் முனிவராய் இருப்பதனாலல்லவா மிக்க திறமை பெற்றிருக்கின்றார்? என்னுடைய தோள் வன்மை அவரிடம் செல்லாததாயிற்று ; நானும் இந்நாள் முதல் பெருந்தவ மியற்றி முனிவனாவேன்," என்று சொல்லி, தம்முடைய நாடு, செங்கோல் முதலியவற்றைத் துறந்து, மலையடிவாரங்களைச் சார்ந்து, அரிய தவத்தைச் செய்து முனிவரானர். அந்நாள் முதல் அவர், வசிட்டரை மிகப் பகைத்து வந்தார். தமக்கும் வசிட்டருக்கும் உள்ள பெரும் பகையை உள்ளத்திற் கொண்டு, வசிட்டர் கூறியதை மறுத்து அவரை யெதிர்க்க எண்ணங் கொண்டு விசுவாமித்திரர், மிக்க சினத்துடன் எழுந்து நின்று, தேவர் கோனை நோக்கி, "மகபதியே, இப்பொழுது வசிட்ட முனிவர் கூறியவை யனைத்தும் பொய்யேயாகும். அந்த அரிச்சந்திரன் மிக்க கொடியவனாவான். அவன், பிறர் மனைவியரை இச்சிப்பவன் ; எப்பொழுதும் பொய்யே

பேசும் குணமுடையவன்; மன வொடுக்கமும் பொறுமையும் சிறிதும் இல்லாதவன்; வஞ்ச நெஞ்சம் படைத்தவன்; கல்வி யறிவு அற்ற கயவன். பெருமை மிக்க உம்முடைய முன்னிலை யில் அக் கொடியவனை நல்லன் என்று இந்த வசிட்டர் கூறினரே! இஃதென்ன புதுமை? அந்த அரிச்சந்திரன் இம் முனிவருக்குச் சீடன். அதனால், தாம் பெருமை யடைய வசிட்டர் பொய்யுரை கூறினர் போலும்,'' என்று மனக் கொதிப்புடன் கூறினர்.

விசுவாமித்திர முனிவருடைய சொற்களைக் கேட்டு வசிட்டர் மிக்க சினங் கொண்டார்; அவருடைய உள்ளம் பதைபதைத்தது; உதடுகள் துடித்தன; கண்கள் சிவந்தன; புருவங்கள் நெற்றியில் ஏறின. விரைந்தெழுந்து அவர், "சிறிதும் குற்றமின்றி, மாசற்ற மணியைப்போல் விளங்கும் மாபெரு மன்னனாகிய அரிச்சந்திரனை, அடாத நிந்தைகள் கூறி யிழித்துரைத்த விசுவாமித்திருடைய வாய் இன்னமும் வெந்திலதே! அங்ஙனம் சொல்லுதற்கு எண்ணிய அவருடைய மனமும் இன்னும் வெந்திலதே! வெறும் பழியைக் கூற இடமாயிருந்த அவருடைய உடம்பும் இன்னும் வெந்து பாழாகாமல் இருக்கின்றதே! ஐயா! இஃதென்ன காலக் கேடு! தெய்வமும் பொய்த்ததே,'' என்று சுதன்

மையில் இருந்தார் அனைவரும் நன்றாகக் கேட்குமாறு உரத்த குரலுடன் கூறினர்.

உடனே விசுவாமித்திர முனிவர் எழுந்து, "வசிட்டர் சொன்ன தீங்குகள் மெய் பேசிய எமக்கு நேருவன வல்ல. பொய்ம்மொழி புகன்ற அம் முனிவருக்கே அவர் உரைத்த தீங்குகள் நேரக் கூடும்," என்று மிக்க சினத்துடன் சொன்னார். 'இனி வாளா விருந்தால் முனிவர்களுடைய சண்டை பெருகித், தீங்கு விளையும்' என்று எண்ணி இந்திரன், வசிட்டர் விசுவாமித்திரராகிய முனிவர் இருவரையும் நோக்கி, நல்லுரைகள் பலவற்றைக் கூறிச் சினம் தணியச் செய்தான். மற்றும், தேவர் பெருமான் அம் முனிவர் இருவரையும் பார்த்து, "அறிவிற் சிறந்த முனிவர்காள், நீங்களே முனிவுகொண்டு இவ்வாறு சண்டையிடுதல் முறை யன்று. மிக்க அறிவு படைத்த நீங்களே இவ்வாறு சண்டையிட்டால், அறிவில்லாத மக்கள் என்ன செய்ய மாட்டார்கள்? இப்பொழுது நீங்கள் இருவரும் கூறியவற்றைக் கொண்டு அரிச்சந்திரனுடைய குணங்களெல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால், உங்களுள் ஒருவர் கூறியவை மெய்யாதல் வேண்டுமல்லவா? யாருடைய சொல் பொய்த்துப் போகிறதோ அவர் என்ன செய்யக் கடமைப் படல் வேண்டும்?" என்று வினவினன். உடனே வசிட்டர் எழுந்து,

"அரிச்சந்திரன் நன்னிலையிலிருந்து சிறிதே னும் தவறுவானாயின், அப்பொழுதே, யான் வருந்திச் செய்த அரிய தவம் முழுவதையும் இழப்பேன்; மற்றும், புலையர் வாழும் சேரியிற் புகுந்து, தலையோட்டிற் பிச்சை வாங்கி யுண்டு அலையக் கடவேன்," என்று மொழிந்தார்.

வசிட்ட முனிவர் அங்ஙனம் சொன்ன வுடன் நாரத முனிவர் எழுந்து, "அயோத்தி அரசன் நற்குண நற்செயல்களினின்று தவறக் கூடியவனா யிருப்பானாயின் வசிட்ட முனிவர் இவ்வாறு உறுதி மொழி கூறுவாரோ?" என்று சொல்ல, விசுவாமித்திரர் விரைந்தெழுந்து, "ஆய்ந்தோய்ந்து பாராமல் வசிட்டரைப் போல் யான் யாதொரு வன்சொல்லும் சொல லேன். என்னுடைய பேச்சுப் பொய்த்துப்போகு மாயின், யான் செய்துள்ள அருமையான தவத் திற் பாதியைத் திரிசங்கு மைந்தனுக்குத் தத்தஞ் செய்து விடுகிறேன்," என்றுரைத்தார். முனி வர்க ளிருவரும் செய்துகொண்ட ஆணைகளை இந்திரன் ஒப்புக்கொண்டான். அவன், தன் னுடைய கொலுமண்டபத்தில் நடந்த அச் செய்தி சிறிதும் வெளியாகா வண்ணம் அடக்க எண்ணி, நாரதரையும் வசிட்டரையும் தன்னி டத்திலேயே இருக்கச் செய்தான்; அரிச்சந்தி ரனைப் பற்றிச் சொன்னவற்றைப் பூவுலகத்தை யடைந்து மெய்ப்பித்துக் காட்டுமாறு விசுவா

மித்திர முனிவரிடம் தெரிவித்தான். அம்முனி வரும் இந்திரனுடைய கொலுமண்டபத்தை விட்டு நீங்கிப் பூவுலகை நோக்கிச் சென்றார்.

5. விசுவாமித்திரர் சூழ்ச்சி

விண்ணுலகத்தை விட்டு நீங்கி, மண்ணுலகத்தை யடைந்த கோசிக முனிவர், கோசல நாட்டின் பக்கலிலிருந்ததொரு பெருஞ்சோலையிற் சென்று தங்கினர்; கோசல நாட்டு வேந்தனை எவ்வாறு வஞ்சித்துப் பொய்யனுக்கலாம் என்பதைப் பற்றி எண்ணமிட்டார். முனிவர் பலர், அரிச்சந்திரனை ஏமாற்ற ஆழ்ந்த கருத்துடனிருந்த கோசிகரிடம் சென்று, "விண்ணுட்டில் நடந்த புதுமைகள் யாவை?" என்று அவரைப் பார்த்துக் கேட்டனர். அந்தக் கேள்விக்கு அவர், "அரியதொரு யாகம் யான் செய்யவேண்டுமென அங்குத் தீர்மானிக்கப்பட்டது," என வஞ்ச நெஞ்சத்துடன் பதிலுரைத்தார்.

தம்முடன் பேசிய முனிவர்கள் அப்புறம் சென்றவுடன் விசுவாமித்திரர், அச்சோலையை விட்டுப் புறப்பட்டுக் கோசல நாட்டின் தலைநகரத்தை நோக்கி விரைந்து நடந்தார்; அயோத்தியை யடைந்தார்; அரிச்சந்திரனைக் கண்டார்; அந்த அரசனை நோக்கி, "மிக்க புகழ் படைத்த மன்னரே, இவ்வுலகில் எவரும் செய்தற்கு அரிய

வேள்வி யொன்றை யான் செய்து முடிக்க எண்ணங் கொண்டேன். அஃது உன்னைப் போன்ற அரசர்க்கு மிக்க நன்மையைப் பயக்கக் கூடிய தாகும்; நாட்டிற்கு எல்லா வளப்பங்களையும் உண்டாக்க வல்லதாகும். ஆதலின், அவ்வேள்வியைச் செய்தற்காக நேரும் செலவுக்கு வேண்டிய பணத்தை உன்னிடம் கேட்டுப் பெற வந்தேன்,'' என்று சொல்லிப் பொருள் வேண்டினார். கௌசிகருடைய வேண்டுகோளுக்கு அயோத்தி மன்னன் மிக்க களிப்படைந்து, அம்முனிவரைப் பார்த்து, "நீர் செய்ய எண்ணங் கொண்ட யாகத்திற்கு எவ்வளவு பணம் வேண்டுமெனினும் யான் இப்பொழுதே முட்டின்றிக் கொடுக்கின்றேன்,'' என்று சொல்ல, "நீர் கொடுப்பதற்கு உடன்பட்ட பொருளை வேண்டும் போது உம்மிடம் வந்து யான் பெற்றுப் போகின்றேன். அதுவரையிலும் அந்தப் பணம் உம்மிடமே இருக்கட்டும்,'' என்று கூறி, அரிச்சந்திரன் பணம் கொடுக்க இசைந்ததைத் தடுத்துத் தாம் முன்னிருந்த சோலையை நோக்கி நடந்தார் கௌசிக முனிவர்.

சோலையை யடைந்து, ஒரு பாறையின்மீது சிறிது நேரம் உட்கார்ந்து, திரிசங்கு மைந்தனை எப்படி வஞ்சித்துப் பொய்யனுக்கலாம் என்பதைக் குறித்துக் கௌசிகர் எண்ணினார். உடனே அவர், அயோத்தி நகரத்தைச் சுற்றிலும் இருந்த

பயிர் பச்சைகள் எல்லாவற்றையும் மேய்ந்து, மிதித்து அழித்துவரக் காட்டிலிருந்த எல்லா விலங்குகளையும், பறவைகளையும் தம்முடைய தவ வன்மையால் ஏவினர். கணக்கற்ற விலங்குகளும், பறவைகளும் ஒன்று சேர்ந்து போய், அயோத்திக்கு அருகிலிருந்த பயிர் பச்சைகளெல்லாவற்றையும் கோமுனிவருடைய கருத்திற் கிணங்க அழித்துப் பாழாக்கின.

விலங்குகளும், பறவைகளும் செழிப்புடன் வளர்ந்து பயன் தரத்தக்கனவாயிருந்த பயிர்களைப் பாழாக்கியதைக் கண்ட குடிகள், வயிறலைத்தோடித் தங்கள் அரசனை யணுகிப் பணிந்து, அவனை நோக்கி, "எங்கள் ஆண்டவரே, நாங்கள் செவ்வனே பயிரிட்டுப் பயன் பெறக் காத்திருந்த வயல்களை யெல்லாம் இன்று விலங்குகளும், பறவைகளும் வந்து அழித்துப் பாழாக்குகின்றன. இந்நாட்டில் எப்பொழுதும் இத்தகைய கெடுதி நடந்ததில்லையே! நாங்கள் என்ன செய்வோம்? எவ்வாறு பிழைப்போம்?" என்று தங்கள் குறையைச் சொல்லி முறையிட்டார்கள்.

குடிகளுக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்டு அரிச்சந்திரனுடைய மனம் திடுக்கிட்டது. அப்பொழுதே அவன், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைவீரர்கள், வேடுவர்கள் முதலியோர்கள் தன்னுடன் வர அரண்மனையை விட்டுப்

புறப்பட்டான்; காட்டை நோக்கி நடந்தான்; தன் எதிரிற்பட்ட விலங்குகளையும் பறவைகளையும் அம்புகளால் அடித்துக் கொன்ருன்; விரைந்து நடந்து காட்டை யடைந்தான்; அங்குப் பல பக்கங்களிலும் திரிந்து நெடுநேரம் வேட்டையாடிக் கணக்கற்ற கொடிய விலங்குகளையும் பறவைகளையும் மடியச் செய்தான். அங்ஙனம் வேட்டையாடியதால், அம்மன்னனுக்கு மிக்க இளைப்புண்டாயிற்று. அதனுல், ஓரிடத்திற் சிறிது நேரம் தங்கியிருந்து அவன் இளைப்பாறலானுன்.

அரிச்சந்திரன் வேட்டையாடுதலை யறிந்த விசுவாமித்திர முனிவர், அந்த அரசனைப் பெருந்துன்பத்திற் குள்ளாக்க எண்ணங்கொண்டார். தம்முடைய தவ வன்மையினுல் அவர் பெரியதொரு பன்றியை யுண்டாக்கினுர்; அயோத்தியைச் சார்ந்த வயல்களிலிருந்த பயிர்களை யழிக்க அப் பன்றியை யேவினுர். முனிவருடைய எண்ணத்தின் வண்ணம் அப் பன்றி விரைந்தோடி, அயோத்தியை யணுகிற்று; ஆண்டிருந்த பயிர்களைப் பாழாக்கத் தொடங்கியது. அதைக் கண்டு வேடுவர் பலர் வலைகள், வாட்கள், குறுந்தடிகள், நாய்கள் முதலியவற்றுடன் ஓடினர்; அந்தப் பன்றியைக் கொல்லத் தம்மால் இயன்றவரை முயன்றனர். அவருடைய முயற்சி பயன்பட்டி

லது. அதனுல், அவ்வேடுவர் ஓடோடியும் சென்று, பன்றி செய்யும் கேட்டை மன்னனிடம் தெரிவித்தனர்.

வேட்டை யாடுதலில் நிகரற்ற திறமை படைத்த அரிச்சந்திரன், ஓடிப்போய் அந்தப் பன்றியை யெதிர்த்து, வல்ல அம்புகள் பல வற்றை யெய்து, அதைச் சிதைத்தான். வாயி லும் உடல் முழுவதிலும் செந்நீர் பெருக்கெடுத் தோடச் சிதைப்புண்ட, மாயையால் வந்த, அப் பன்றி, மிக்க அச்சங் கொண்டது; நடு நடுங் கிற்று; பதை பதைத்தது; பெருமூச் செறிந் தது; துள்ளிக் குதித்தது; தொப்பென்று கீழே விழுந்தது; துடிதுடித் தெழுந்து விசுவாமித் திரரை நாடி யோடிப் போயிற்று.

அயோத்தி அரசன் திரும்பிச் சென்று காட்டை யடைந்தான். அங்கு அவன், தன் னுடைய சேனைகளுடன் எல்லாப் பக்கங்களி லும் திரிந்து, நெடு நேரம் வேட்டையாடினுன்; அதனுல் மிக்க களைப்பை யடைந்தான். மாலைப் பொழுதாயிற்று. கௌசிக முனிவர் இருந்த சோலையை யடைந்து, அங்கு ஓர் அழகிய இடத் தில் தன்னுடைய சேனைகளுடன் அரசன் தங்கி இளைப்பாறலானுன். அன்றிரவை அவ்விடத்தி லேயே கழிக்க அவன் எண்ணங் கொண்டான்; தன்னுடைய யானைகள் குதிரைகள் முதலியவற்

றிற்குத் தக்கவாறு இரை தருமாறு தொழும்பர்களுக்குக் கட்டளை யிட்டான். கதிரவனும் மேல் கடலில் ஆழ்ந்தான். பேரிருள் உலகத்தை மூடிற்று. அரிச்சந்திரனும், அமைச்சர் முதலியோரும் அறுசுவையுண்டி யருந்தினர். மன்னன், தனக்கென அமைத்த கூடாரத்திற் சென்று, தன்னுடைய மனைவியுடனும் மகனுடனும் அழகிய கட்டிலின் மீது அமைத்திருந்த பஞ்சணையிற் படுத்துத் தூங்கினான். அமைச்சர் முதலியோரும் தத்தமக்குஅமைத்திருந்த கூடாரங்களிற் சென்று உறங்கினர். அன்றிரவு கழிந்தது; பொழுது புலர்ந்தது. விடியற் காலத்தில் அரசன் படுக்கையினின்று எழுந்து, தானிருந்த இடத்திற் கருகில் இருந்ததோர் அருவியில் நீராடிக் காலைக் கடன்களை முடித்து முகவாட்டத்துடன் இருந்தான். சந்திரமதி, தன்னுடைய நாயகன் முகத்தைக் கண்டு திடுக்கிட்டாள்; கணவனை யணுகி முகவாட்டத்தின் காரணத்தை வினவினாள். தான், சென்ற இரவு ஒரு தீக் கனவைக் கண்டதாக அரிச்சந்திரன் தெரிவித்தான். பிறகு சத்தியகீர்த்தி, மன்னனிடம் வந்து பணிந்து நின்றான். அரசன், தான் கண்ட கனவை அறிவில் மிக்க அந்த அமைச்சனிடம் சொன்னான். அதற்குச் சத்தியகீர்த்தி அரசனை நோக்கி, "நீர் கண்ட கனவின் பயன், உமக்கு மிக்க புகழை யுண்டாக்குவதே யாகும்; கடவுள்

அருளால் நமக்கு எந்நாளும் நன்மையே விளையும்,'' என்று விடை யளித்து, மன்னனுடைய மனம் தேறுதலடையுமாறு செய்தான்.

தாம் ஏவிய பன்றியை அரிச்சந்திரன் னையப் புடைத்துத் திருப்பித் துரத்தியதைக் கண்ட கோமுனிவர், மிக்க சினங் கொண்டார். அந்த அரசனை வஞ்சித்து, அயோத்தியை விட்டு அப்புறம் போகச் செய்தற்கு எண்ணி, அம் முனிவர் தாழ்ந்தகுலப் பெண்கள் இருவரை யுண்டாக்கினர். கைகளில் வீணைகளுடன் தோன்றிய அப்பெண்களை நோக்கி அவர், "நீங்க ளிருவரும் அரிச்சந்திரன் முன்னிலையை யடைந்து, பலவகைப் பாட்டுக்களைப் பாடிப் பலவாறு நடித்து அவ்வரசன் மகிழுமாறு செய்து, அவனுடைய வெண்கொற்றக் குடையைப் பரிசிலாகப் பெற்று வருதல் வேண்டும். அக்குடையைக் கொடுப்பதற்கு அவன் மறுப்பானாயின், அவனை நீங்கள் மணம் புரிந்தாயினும் வருதல் வேண்டும்,'' என்று சொல்லிக் கற்பித்து, அப்பெண்களிருவரையும் அரிச்சந்திரனிடம் போக்கினர்.

கௌசிகருடைய கட்டளையின்படி அம் மாதரும், அரிச்சந்திரன் முன்னிலையை யடைந்து கல்லும் உருகப் பல இனிய பாட்டுக்களைப் பாடினர்; அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலிய தெய்வ மகளிரை யொப்ப ஆடி

னர். அவற்றைக் கண்டு அரிச்சந்திரன் உளம் மிக மகிழ்ந்து, அப் பெண்களை நோக்கி, "உங்களுடைய ஆடல்களும் பாடல்களும் எனக்கு மிக்க களிப்பை யுண்டாக்கின. ஆதலால், உங்களுக்குப் பரிசில் கொடுக்க இச்சிக்கின்றேன். நீங்கள் விரும்புவது யாது? தெரிவிப்பீராக," என்று வினவினன். அப்பெண்கள் அரசனைப் பார்த்து, "மாட்சிமை பொருந்திய மன்னரே, உம்முடைய வெண்கொற்றக் குடையைப் பெற்றுப் போக நாங்கள் விரும்புகின்றோம்," என்று பதில்சொல்லினர். அவ்வேண்டுகோளைக் கேட்ட அரசன், "என்னிடமிருக்கும் வெண்கொற்றக் குடை, கதிரவன் மரபில் வந்த பல அரசர்களுக்கும் தலைமுறை வழியே வந்ததாகும். ஆதலின், யான் அதைக் கொடுத்தற்கு உரியவன் அல்லன்; அதை யொழித்துக் கொடுக்கக்கூடிய பொருளை நீங்கள் கேட்டால், யான் தடையின்றிக் கொடுப்பேன்," என்று அம்மாதரை நோக்கிக் கூற, அவ்விருவரும், "வெற்றியையுடைய அரசரே, நாங்கள் விரும்பிக் கேட்டதைக் கொடுக்க மறுத்தீர். அதைக் கருதி யாங்கள் உம்மிடம் வெறுப்படைகின்றோம் அல்லோம். எங்களை நீர் மணம் புரிய வேண்டுகின்றோம். இம் முறை யாயினும் எங்கள் விருப்பத்தை முட்டின்றி முடிக்க விரும்புகின்றோம்," என்று அரசனைப் பார்த்துப் பணிவுடன் கேட்டனர். அப்பொழுது, அரசனுக்கு

அருகிலிருந்த அமைச்சன் சத்தியகீர்த்தி, மிக்க சினங் கொண்டு அப் பெண்களைக் கடுமொழியால் அதட்டிப் பயமுறுத்தி அப்புறம் போகத் துரத்தினான்.

மந்திரியினுடைய செயலைக் கண்டு அம் மாதர் இருவரும் அஞ்சி நடுங்கினர்; அழுகுரலோடு, தம்மை ஏவிய முனிவரை நாடித் திரும்பிச் சென்றனர். முனிவரை யடைந்து அப் பெண்கள் அரிச்சந்திரனிடம் நிகழ்ந்தவற்றைக் கூறினர். பெண்களுடைய பேச்சைக் கேட்டு விசுவாமித்திரர் மிக்க சினங்கொண்டார்; அப்பொழுதே புறப்பட்டு அரிச்சந்திரனை நாடி நடந்தார். அரிச்சந்திரன் முன்னிலையிற் சென்று, அவர் பெருமூச் செறிந்து கோபக் குறியைக் காட்டி நின்றார். முனிவருடைய தன்மையை யறிந்த அரிச்சந்திரன் நடுநடுங்கினான். தன் இருப்பிடத்தை விட்டெழுந்து அவன், கீழே விழுந்து முனிவருடைய அடிகளை வணங்கினான்; எழுந்து நின்று, கைகட்டி அவரை நோக்கி, "முனிவர்களுக்குள் சிறந்தவரே, தாங்கள் மிக்க சினத்துடன் வந்திருப்பதாகக் காணப்படுகின்றீர்கள். அடியேன் தங்களுக்கு என்ன குற்றம் செய்தேனோ? அறியாதவனாகிய யான் எத்தகைய குற்றம் செய்திருப்பினும், தாங்கள் பொறுத்தருள வேண்டுகின்றேன்," என்று வணக்கத்துடன் கூறினான். அங்ஙனம் கூறிய

மன்னனை நோக்கிக் கௌசிகர், "உன்னைப் போன்ற வஞ்ச நெஞ்ச முடைய ஒருவனை இந் நாள்வரை யான் எங்கும் கண்டிலேன். கள்ளத் தன்மையில் நீ கை தேர்ந்தவனாகக் காணப்படு கின்றாய். இன்ப முண்டாகப் பேசிப் பிறரை மயக்கும் தொழிலில் நீ வல்லவனா யிருக்கிறாய். நீ நல்ல அரசன் என்று கருதி யான் பெற்ற பெண்கள், உன்னிடம் வந்து பல இனிய பாட்டுக்களைப் பாடினர். அவருடைய பாட்டுக் களைக் கேட்டு நீ மிக்க மகிழ்ச்சி யடைந்தும் அவருக்கு யாதொரு பரிசும் கொடாமல், அவரை வெருட்டித் துரத்தினாய். அப்படிச் செய்வது உனக்கு அழகாகுமா? நீயும் ஒரு செங்கோல் வேந்தனா?" என்று மனக்கொதிப் புடன் கேட்டார்.

அயோத்தி அரசன் மிக்க அச்சத்துடன் முனிவரைப் பார்த்து, "சிறிது நேரத்திற்கு முன்பு என்னிடம் வந்து பாடிய மாதர் தங்க ளுடைய பெண்கள் என்பதை அடியேன் அறி யேன்," என்று சொல்லக் கௌசிகர், "அப் பெண்கள் என்னுடைய மக்களென்பதை இப் பொழுது தெரிந்து கொண்டனையல்லவா? இனி அப்பெண்களை நீ மணம் செய்து கொள்ளத் தடை யென்ன இருக்கிறது?" என்று அரிச் சந்திரனைப் பார்த்துக் கேட்டார். அதற்கு

அம்மன்னன், "முனிவர் பெரும, என்னுடைய கண்களைக் கேட்பினும் கொடுப்பேன்; யான் ஆளுகின்ற நாட்டை வேண்டினும் தருவேன்; இழிந்த குலத்திற் பிறந்த அப்பெண்களை மாத்திரம் யான் மணம் செய்து கொள்ளேன்," என்று பதிலுரைத்தான். அதைக் கேட்ட கோமுனிவர், அரசனைப் பார்த்து, "அரிச்சந்திர, உன்னுடைய தந்தைக்கு நேர்ந்த புலைத்தன்மையை யார் போக்கினர் என்பதை யெண்ணிப் பார்க்காமல் இங்ஙனம் பேசுகின்றனையே! என்னுடைய திறமையை நீ நன்றாய் அறிந்தவனாயிருந்தும், இவ்வாறு புத்தி யில்லாதவனைப்போலப் பேசுதல் உனக்கு அழகாமோ? இருக்கட்டும்; 'யான் ஆளுகின்ற நாட்டை வேண்டினும் மகிழ்வுடன் கொடுப்பேன்' என்று நீ இப்பொழுது சொன்னா யல்லவா? நீ கூறியவாறே உன்னுடைய நாட்டை எனக்குத் தத்தம் செய்து கொடு," என்று கேட்டார்.

அயோத்தி வேந்தன், மிக்க மனமகிழ்ச்சியுடன் தன்னுடைய நாடு முழுவதையும் விசுவாமித்திர முனிவருக்குத் தத்தம் செய்துகொடுத்தான்; காட்டிலிருந்த அம்முனிவரைத் தன்னுடைய நாட்டுக்கு அழைத்துச் சென்று, தான் படைத்திருந்த எல்லாப் பொருள்களையும் அம்முனிவருக்கே சொந்தமாக்கினான். அரசன் முனி

வருக்கு நாட்டைக் கொடுத்ததைக் கண்ட அந் நாட்டுக் குடிகள் மிக்க மனவருத்தமடைந்தனர்; துக்கித்தனர். அக்குடிகளெல்லாரும் ஒரு பெருங் கூட்டமாகக் கூடிச் சென்று, அரிச்சந்திரன் இருந்த இடத்தை யடைந்து, கீழே விழுந்து அந்த அரசனுடைய அடிகளை வணங்கிப் பல வாறு சொல்லி யழுது வருந்தினர். அவர் களுக்கு ஏற்றவாறு தேறுதல் கூறி, அவர் களுடைய துக்கத்தை மாற்றினான் அரசன்.

---

6. அரசன் நாட்டைத் துறந்து போதல்

எத்தகைய தீங்குகள் விளைவித்தாலும் அரிச் சந்திரன், தன்னுடைய நற்குண நற்செயல்களி னின்று தவறாமல் இருத்தலைக்கண்டு விசுவாமித் திரர், ஒரு சூழ்ச்சி செய்ய எண்ணங் கொண்டார். உடனே அவர், அம்மன்னனை யணுகி அவனை நோக்கி, "நீ சிறிது நேரத்திற்கு முன்பு உன்னு டைய நாட்டை எனக்குக் கொடுத்தனை; ஆயினும் யான் செய்ய விரும்பிய வேள்விக்காகக் கொடுப்ப தாய் வாக்களித்த பொருளை நீ இன்னும் கொடுத் தாயல்லை. அப்பணத்தை இப்பொழுது கொடுப் பாயாக," என்று வினவினர். அதைக் கேட்ட தும் அரசனுடைய மனம் திடுக்கிட்டது. அவன்,

முனிவரைப் பார்த்து, " உம்முடைய வேள்விக்காக யான் கொடுப்பதாய்ச் சொன்ன பணம், உமக்கு இன்று யான் கொடுத்த இந் நாட்டின் பொருட்சாலையில் இருக்கின்றன," என்று மொழிந்தான். முனிவர், " நாட்டை எனக்குக் கொடுத்தபோதே பொருட்சாலையும் அதில் அடங்கி விட்டது அல்லவா? எனக்கு நாட்டை வழங்கிய காலத்தில் 'யாகத்திற்குக் கொடுப்பதாக வாக்களித்த பணம் பொருட்சாலையில் இருக்கின்றது' என்று குறிப்பிட்டு எனக்குச் சொல்லியிருக்கின்றனையா நீ?" என்று கேட்க, அரசன், " அப்படியாயின், உமக்குக் கொடுப்பதாய்ச் சொன்ன பணம் முழுவதையும் நாற்பது நாள் தவணைக்குள் தருகிறேன்," என்று பதில் கூறினான். அதற்கு முனிவர், "வேந்தனே, இந்நாடு என்னுடையதாயது. ஆதலால், நீ வேறு நாடு சென்று எனக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைச் சேர்த்து, நாற்பது நாள் தவணைக்குள் கொடுப்பாயாக," என்று சொல்லிக் கோசல நாட்டை விட்டுச் செல்லக் கட்டளை யிட்டார்.

விசுவாமித்திர முனிவர் கொடுத்த காவியாடைகளை யுடுத்து அரிச்சந்திரனும், அவனுடைய மனைவியும், மைந்தனும் அந்நாளிலேயே அயோத்தியை விட்டுப் புறப்பட்டனர்; அந்நகரத்தைக் கடந்து சென்று பெரியதொரு

சோலையில் தங்கினர். அரசனை விட்டு எப்பொழுதும் பிரிந்தறியான் சத்தியகீர்த்தி. ஆதலால் அவனும்அரசனைப்பின்தொடர்ந்து சென்றான். அங்ஙனம் தன்னைத் தொடர்ந்து வந்த மந்திரிக்கு மன்னன், பற்பல நீதிகள் எடுத்துச் சொல்லித் தன்னுடன் வராமலிருக்கத் தடுத்தான். அமைச்சன், அரசனுடைய சொற்களைக் கேட்டு நின்றான் அல்லன். ஆதலால், அமைச்சனையும் தன்னுடன் அழைத்துச் செல்ல அரிச்சந்திரன் உடன்பட்டான்.

மன்னனுடைய மனத்தின் நிலைமையைச் சோதிக்க எண்ணி, அவன் தங்கியிருந்த சோலையை யடைந்து, ஒரு புறத்தில் மறைந்திருந்தார் கோசிக முனிவர். அப்பொழுது, தங்களுடைய செங்கோல்வேந்தன் பிரிவைப் பொறுக்க முடியாமல் கோசல நாட்டுக் குடிகளெல்லாரும் திரண்டுவந்து, அரசனுடைய அடிகளை வணங்கி, அவனை நோக்கி, "நாங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து, கொடியவராகிய விசுவாமித்திர முனிவரை யெதிர்த்துச் சண்டை செய்து, அவரைச் சின்னபின்னப்படுத்தித் தங்களுடைய நாட்டை விட்டு ஓடச் செய்கின்றோம். தாங்கள் அயோத்திக்குத் திரும்பி வாருங்கள். தங்களை விட்டு நாங்கள் பிரிந்திருக்க மாட்டோம். மிகக் கெட்டவராகிய முனிவருடைய ஆணைக்கு

நாங்கள் அடங்கியிருக்க மாட்டோம்,'' என்று சொல்லி, அயோத்திக்குத் திரும்பி வருமாறு அரசனை வேண்டினார்கள். மன்னன் தக்க நீதிகள் பலவற்றை யெடுத்துக் கூறி, அக்குடிகளை நாட்டுக்குத் திரும்பிப் போகும் வண்ணம் செய்தான்.

மன்னனும் குடிகளும் பேசியவற்றை மறைவிலிருந்து உற்றுக் கவனித்த கௌசிகர், திடீரென அரசன் முன்பு தோன்றி, "ஆ! ஆ!! அரிச்சந்திர, இஃது என்ன கொடுமை. நீயும், உன்னுடைய அமைச்சனும், குடிகளும் ஒன்று சேர்ந்து என்னை இகழ்ந்து பேசினீர்களே! இப்படிப் பேசுதல் நல்லதாகுமா? நீ கொடுத்த நாட்டை நீயே பெற்றுக்கொள். அஃது எனக்கு வேண்டாம்,'' என்று மன்னனைப் பார்த்துச் சொல்லிக் கைகளையும் கால்களையும் உதறித் துடித்தார். அரசன் திகைத்து, முனிவரை நோக்கி, "என்னிடம் வந்து, என் நிலைமையைக் கண்டு அழுது வருந்திய குடிகளைத் தேற்றியனுப்பினேனே யன்றித் தங்களைத் தாழ்த்தி அடியேன் ஒன்றும் சொன்னேனல்லேன். என்னுடைய உயிர் நீங்கினும், யான் கொடுத்த நாட்டைத் தங்களிடமிருந்து திரும்பப் பெறேன்,'' என்று மொழிந்து, தான் இருந்த இடத்தை விட்டு அப்புறம் போகலானான்.

அங்ஙனம் சென்ற வேந்தனை யழைத்து; அவனைப்பார்த்து முனிவர், "எனக்குக் கொடுப்ப தாக நீ கூறிய பொருளுக்கு வழி யாது? உன்னுடைய சொல்லை நம்பலாமா?" என்று கேட்க, "நாற்பது நாட்களுக்குள் கொடுப்பதாய் முன்பே உறுதி மொழி கூறியுள்ளேன். சொன்ன வண்ணம் யான் நடப்பேன். தாங்கள் என் சொல்லை நம்பி யிருக்கலாம்," என்று அரசன் பதிலுரைத்தான். தாம் அனுப்பும் ஆளை யுடன் அழைத்துச் சென்று, தமக்குச் சேரவேண்டிய பணத்தை நாற்பது நாள் தவணைக்குள் அந்த ஆளிடம் கொடுத்து அனுப்புமாறு விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம் சொன்னார். அரசனும் அதற்கு ஒத்துக்கொண்டான்.

நட்சத்திரேசன் என்னும் தம்முடைய மாணாக்கனை யழைத்து, அவனை நோக்கிக் கௌசிகர், "நீ அயோத்தி வேந்தனுடன் சென்று எனக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெற்று வா. அங்ஙனம் நீ போகும்போது வழியில், அம்மன்னனைப் பல வருத்தங்களுக் குள்ளாக்கி, அவன் கெட்ட நடத்தை யுடையவன் என்று காட்ட முயல்வாய். 'விசுவாமித்திரருக்கு நான் பொருள் கொடுக்கவேண்டியதில்லை' என்று அவன் சொல்லும்படி, அவனுக்குப் பல துன்பங்களை யுண்டாக்குவாயாக. அப்படி அவன் பொய் சொல்லுவானாயின், உடனே நீ என்னி

ட்டம் திரும்பி வா. பொய் சொல்லானாயின், அடிக்கடி உணவு முதலியவற்றைக் கேட்டுப் பலவாறு அவனை நீ துன்புறுத்தல் வேண்டும்,'' என்று சொல்லிக் கொடிய செயல்களைச் செய்யக் கற்பித்து, அந்த மாணாக்கனை அரசனிடம் போக்கினான்.

59008

நன்னெறியினின்று எள்ளளவும் மாறுபடாத மன வுறுதியையுடைய கோசல நாட்டு மன்னன், தன்னுடைய மனைவி, மைந்தன், மந்திரி முதலியோருடன் நட்சத்திரேசனையும் அழைத்துக்கொண்டு, காசிமா நகரத்தை நோக்கி நடந்தான். அவ்வாறு சென்றபோது இடைவழியிற் பாலைவனம் ஒன்று குறுக்கிட்டது. அதைக் கடந்து செல்லச் சந்திரமதியும் தேவதாசனும் மிகவருந்தினர். அவர்களைப் பார்த்து அரசன், மிக்க மனவருத்த மடைந்து முகவாட்டத்துடன் நின்றான். அப்போது தேவதாசனைத் தன்னுடைய தோளின் மீது தூக்கி வைத்துக்கொண்டு சத்தியகீர்த்தி நடந்தான்.

பாலைவனத்தைக் கடந்து செல்லத் தன் மனைவி வருந்தியதைக் கண்ட மன்னன், பதைபதைத்து அம்மாதை நோக்கி, "மங்கையர் மாணிக்கமே, என் தோளின்மீது நீஏறிக்கொள். இப் பாலைவனத்தில் நடந்து செல்ல உன்னால் முடியாது,'' என்று உரைத்தான். அதற்குச் சந்திரமதி, "பூமகளும் மண்மகளும் ஏறுதல்

O-892

பொறுமல் தங்களுடைய அழகிய தோள்களை ஒரு முனிவனுக்கு அளித்தீர்களே! நாயினும் தாழ்ந்தவளான அடியேன் அத்தோள்களின் மீது ஏறுதல் தகுமா?'' என்று பதிலுரைத்தாள். மன்னன், "அன்னப் பறவையைப் போன்ற அழகிய நடையையுடைய நங்காய், அறிவிற் சிறந்த நீ எப்பொழுதும் இப்படியே பேசுதல் வழக்கமே யல்லவா? உன்னுடைய கூரிய புத்தியை என்னென்று சொல்லுவேன்,'' என்று தன் மனைவியைப் பார்த்துச் சொல்லி நடந்தான். அரிச்சந்திரன் முதலியோர் பட்ட துன்பத்தைக் கண்டு அஞ்சியவன்போலக் கதிரவனும் மேல் கடலில் மூழ்கினான்.

சூரியன் மறைந்து சிறிது நேரம் கழிந்ததும் பேரிருள் மூடிக்கொண்டது. மேகங்கள் திரண்டு பெரு முழக்கங்களை யுண்டாக்கின. கணக்கற்ற இடிகள் இடித்தன. எண்ணிறந்த மின்னல்கள் மின்னின. யுகத்தின் முடிவில் பொழிவதைப் போலப் பெருமழை பெய்யத் தொடங்கிற்று. இடிகள், மின்னல்கள், மழை முதலியவற்றைக் கண்டு அரசன் முதலியோர் மிக்க அச்சங் கொண்டனர்; வருந்தினர்; பொறுமையோடு ஒருவாறு வழியைக் கண்டு சென்றனர்.

மன்னன், சந்திரமதி, தேவதாசன் முதலியோர் மழையால் மிக வருந்திக்கொண்டிருந்த

போது, நட்சத்திரேசன் அவர்களுக்குச் சொல லொணுத் துன்பங்களை யுண்டாக்கினுன். தான் மிகத் துன்புறுவதாய்ப் போலித் தன்மையோடு நடித்து அவன், மன்னன்முதலியோர்க்கு அளவு கடந்த அச்சத்தை யுண்டாக்கினுன். அரசன் அந்த அந்தணச் சிறுவனுக்குத் தேறுதல் சொல்லுதலிலேயே பெருந்துன்பமடைந்தான்.

பெருமழை பெய்துகொண் டிருந்தபோது அரசன் முதலியோர் வருந்திக்கொண் டிருந்த தைப் பார்த்துச் சிறிதும் இரக்கமின்றி நட்சத் திரேசன், "ஆ! இவ்வாறு துன்பப்படவா உம் முடன் யான் வந்தேன்? எப்பொழுதும் யான் இத்தகைய துன்பத்தை யடைந்திலேன். ஐயோ! பசிநோய் என்னை மிக வருத்துகின்றது. என் னுடைய உயிர் நீங்கும்போலக் காண்கிறது. விரைவில் யாதாயினும் சிறிதளவு உணவு கொடுப்பீர்," என்று மன்னனைப் பார்த்துக் கேட் டான். அவ்விடத்திற் கிடைக்கக்கூடிய காய் கனிகள் சிலவற்றைத் தேடிப் பறித்து, விரை விற் கொணர்ந்து அந்தணச் சிறுவனிடம் கொடுத்தான் அரசன். அந்தக் காய் கனிகளைப் பார்த்து நட்சத்திரேசன், மிக்க சினங் கொண் டான்; அவை தனக்கு வேண்டாமென்று சொல் லித் தின்ன மறுத்தான். அரசன் முதலியோர் வணக்கத்துடன் பல இனிய சொற்களைக் கூறி அச் சிறுவனை யுண்பித்தனர்.

அரசன் முதலியோர் பட்ட துன்பங்களைப் பார்த்து மிக்க மனவருத்த மடைந்தவனைப் போல் நடித்து, வஞ்ச நெஞ்சத்துடன் அரசனைப் பார்த்து நட்சத்திரேசன், "ஐயோ! மன்னரே, நீர் படும் துன்பங்களைப் பார்த்து என் மனம் மிகக் கலங்குகின்றது. உம்முடைய நன்மைக்காக யான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். அஃது யாதெனின், 'விசுவாமித்திர முனிவருக்குக் கொடுத்த நாட்டைக் கொடுத்ததில்லை யென்று நீர் மறுத்துச் சொல்லின், முன் இருந்ததைப்போல் இன்பத்துடன் உம்முடைய நாட்டிலிருந்து நீர் வாழலாம்' என்பதேயாம். நீர் நன்றாய் வாழ்ந்திருப்பதற்கு இதுதான் செய்யத்தக்க வேலையாகும்," என்று கூறினான். உடனே மன்னன் அந்த மாணக்கனை நோக்கி, "ஐயரே, சிறிது நேரத்திற்குள் வறிதே நீங்கக் கூடிய துன்பத்துக்குப் பயந்து, உலக முள்ள வரையில் நீங்காமல் புகழுடன் நிலைத்திருக்கக் கூடிய உண்மைக்குப் பகையாக நடக்கலாமோ? பல கலைகளையும் நன்றாய்க் கற்று நல்ல வழியில் நடக்கத் தொடங்கிய உமக்கு இத்தகைய அறிவு எப்படி யுண்டாயிற்றோ? யான் நன்னெறியிலிருந்து விலகின், என்னைத் தடுத்து நல்லறிவு சொல்லுவீர் என்று எண்ணினேன்; என் எண்ணத்திற்கு மாறாக நடக்கின்றீரே! யான் என்ன செய்வேன்? 'பசி' என்று இரந்தார்க்குச் சோறு

இடாமல் மண்ணை வாரி வாயிற் போட்டுக்கொள்ளச் சொல்லுவதைப்போல் நீர் புத்தி சொல்ல வந்தீரே! உம்முடைய பேச்சு மிக நன்று யிருக்கிறது,'' என்று பதிலுரைத்தான். பின்னர், அரசன் முதலிய ஐவரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போய்ச் சோணமா நதிக் கரையைச் சேர்ந்தனர்; அங்குத் தங்கி யிருந்து அன்றிரவைக் கழித்தனர். மறுநாள் விடியற்காலத்தில் எழுந்து ஐவரும், அவ்விடத்தை விட்டுச் சென்று யமுனை நதிக் கரையை யடைந்தனர். இருகரையும் புரள அந்த ஆற்றிற் பெரு வெள்ளம் ஓடிக்கொண் டிருந்தது. அதனால், சிறிது நேரம் அந்த ஆற்றங் கரையில் மன்னன் முதலியோர் தங்கி யிருக்கலாயினர்.

அப்பொழுது கௌசிகர் அந்த ஆற்றங் கரைக்கு விரைந்து வந்தார். முனிவர் வரவைக் கண்டு அரிச்சந்திரன் திடுக்கிட்டான். முனிவருடைய அடிகளை வணங்கி, அவரை நோக்கி, "தாங்கள் இங்கு விரைந்து வர என்ன நேர்ந்ததோ? தங்களுக்கு யாராயினும் தீங்கு இழைத்தனரா?'' என்று அரசன் வினவினன். விசுவாமித்திரர், "எனக்கு ஒருவரும் யாதொரு தீங்குஞ் செய்திலர். ஆயினும், உன்னுடைய மனைவி மைந்தருடன் நீ இவ்வாறு அலைந்து துன்புறுவதை யறிந்து என்னுடைய மனம் மிக வருந்துகின்றது. ஆதலின் எனக்குக் கொடுத்த

நாடு நகரங்களை நீ திரும்பப் பெற்று இன்பத்துடன் வாழ்ந்திருக்க வருவாயாக," என்று மன்னனைப் பார்த்துச் சொன்னார். அதற்கு அவ்வரசன், "நரகத்திற் கிடந்து வருந்தினும் ஒருவருக்குக் கொடுத்ததை யான் திரும்பப் பெறக் கருதேன்," என்று பதில் கூறினன்.

அரிச்சந்திரனுடைய மனவுறுதியைக் கண்ட கௌசிகமுனிவர் மிக்க வியப்பை யடைந்தார். உடனே அவர், தம்முடைய மாணாக்கனைத் தனியே யழைத்து, அவனை நோக்கி, "அரிச்சந்திரன் ஒரு பொய்ச் சொல்லேனும் புகலும் வண்ணம் செய்வாயாக," என்று சொல்லித் தம்முடைய இருப்பிடத்தை நோக்கி நடந்தார். நட்சத்திரேசனும் மன்னன் இருந்த இடத்தை யடைந்தான். கொஞ்ச நேரத்துக்குள் யமுனை நதியில் வெள்ளமும் சிறிது குறைந்தது. அவ்வேளை, அரசன் முதலிய ஐவரும், அந்த நதியைக் கடந்து சென்று மறுகரை யேறினர். அவ்விடத்திற் சிறிது நேரம் தங்கி யிளைப்பாறிய பின்னர் ஐவரும், காசிமா நகரத்தை நோக்கி நடந்தார். வழியிடையில் நட்சத்திரேசன், மன்னன் முதலியோரைப் பல வாறு வாட்டினன். அவ் வருத்தங்களால் அரிச்சந்திரனுடைய மனநிலைமை மாறுபட்டிலது. எத்தகைய துன்பங்கள் நேரிட்டாலும்

அறிவிற் சிறந்தவருடைய மன வுறுதி மாறு படுவதுண்டோ?

---

7. அரிச்சந்திரன் விலைப்படுதல்

கோசல நாட்டு மன்னன் முதலியோர், முத்தி தரும் நகரங்கள் ஏழனுள் ஒன்றுயதும், மிக்க புகழ் படைத்ததுமாகிய வாரணசி என்னும் காசி மாநகரத்தை யடைந்து, ஒரு மடத்தில் தங்கி உணவருந்தி இளைப்பாறினர். சிறிது நேரம் கழிந்ததும் நட்சத்திரேசன் மன்னனைப் பார்த்து, "முனிவருக்குச் செலுத்தவேண்டிய பணம் முழுவதையும் இன்றே நீர் கொடுக்க வேண்டும். அன்றேல், யாதொன்றையும் செய்யவும், எங்கும் போகவும் உம்மை விடமாட்டேன்," என்று மொழிந்தான். அம்மொழிகளைக் கேட்டு அரசன், இன்னது செய்வதென்று தோன்றுமல் மனம் திகைத்து நின்றுன்.

அவ்வாறு நின்ற தன் கணவனுடைய மன வருத்தத்தையும், முகவாட்டத்தையும் பார்த்துச் சந்திரமதி, மிக்க துயரத்தை யடைந்தாள். தன்னுடைய துக்கத்தை யடக்கிக் கொண்டு அவள், மிக்க பணிவுடன் தன் நாயகனைப் பார்த்து, "என் அருமை நாயகரே, நாம் கோசிகருக்குக் கொடுக்கவேண்டியபொருளைப்பெறுதற்குத் தாங்

கள் பலவாறு எண்ணுவானேன்? வெண்ணெ யைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலே வாரும் உளரோ? அடியாள் இருக்கத் தாங்கள் ஏன் மனவருத்த மடையவேண்டும்? என்னை யும் தங்கள் செல்வச் சிறுவனையும் ஒருவருக்கு அடிமையாக்கிக் கௌசிகருடைய கடனைத் தீர்த் தலே நல்லதாகும்,'' என்று சொன்னாள்.

தன்னுடைய மனைவியின் சொற்களைக் கேட்டு அரிச்சந்திரன், முன்னிலும் மிக்க மன வருத்த மடைந்தான். அவளை நோக்கி, "பெண் மணி, ஆண் மகன் அடிமைப் படுதலே நல்ல தாகும்,'' என்று சொல்லி ஒருவாறு மயங்கி நின் றுன் மன்னன். அவ்வேளை, வேலைக்காரி ஒருத்தி வேண்டுமென்று சொல்லிக் காலகண்டன் என் னும் அந்தணன் ஒருவன், அயோத்தி வேந்தன் முதலியோர் இருந்த இடத்தை யடைந்தான். சந்திரமதியை அந்த அந்தணனுக்கு அடிமை யாக்க அரிச்சந்திரனும் ஒருவாறு ஒத்துக் கொண்டான். வேலைக்காரியை வேண்டி வந்த அந்தணன், சந்திரமதியைச் சுட்டிக்காட்டி அரசனை நோக்கி, "இவள் யாவள்? இவளு டைய பெயர் யாது? இவளை யடிமையாக்க எவ்வ ளவு பணம் கேட்கிறீர்கள்?'' என்று வினவினான்.

அந்தணனைப் பார்த்து அரிச்சந்திரன், "ஐயரே, இவள் என் அருமை மனைவியாவாள். இவள், சந்திரமதி என்னும் பெயரை யுடைய

வள். வல்லான் ஒருவன் யானை மீதிருந்து வானத்தை நோக்கி எறியச் செல்லுங் கவண்கல் அளவிற்கு விசுவாமித்திர முனிவருக்கு யான் பொருள் தரல் வேண்டும். அவ்வளவு பொருளைக் கொடுத்து நீர் இம்மாதை யடிமையாக்கிக் கொள்ளலாம்,'' என்று சொல்ல, அந்தணன் மன்னனை நோக்கி, "இம்மங்கையுடன் உம்முடைய மைந்தனையும் அடிமை யாக்குவாயானால், நீர் கேட்ட அளவு பொன் கொடுக்கலாம்,'' என்று கூறினான். அரிச்சந்திரனும் அதற்கு உடன்பட்டு, தன்னுடைய மனைவியுடன் மைந்தனையும் காலகண்டனுக்கு அடிமையாக்கி, தான் வேண்டிய அளவு பணத்தைப் பெற்று, அப்பணத்தை முனிவருக்குச் சேர்ப்பிக்குமாறு நட்சத்திரேசனிடம் கொடுத்து, மனக் கவலை யொழிந்து நின்றான்.

விசுவாமித்திரருக்குச் சேர வேண்டிய பொருளைப் பெற்றுக் கொண்டதும் நட்சத்திரேசன், அரிச்சந்திரனை மற்றும் துன்புறுத்தக் கருதி அவனை நோக்கி, "அரசரே, மிக நன்றாய்ச் செய்தீர்! முனிவருக்குச் சேர வேண்டிய பொருள் முழுவதையும் கொடுத்தீர். ஆயினும், யான் இத்தனை நாட்களாக உம்முடன் திரிந்து வருந்தியதற்காக எனக்கு யாதாயினும் ஓர் அளவு பொருள் கொடுக்கவேண்டியதில்லையா?'' என்று கேட்டான். முனிவருடைய மாணாக்கன்

அங்ஙனம் கேட்டது நீதி என்றே எண்ணிய அரிச்சந்திரன், தன்னை எவருக்காயினும் அடிமை யாக்கி, அதனால் கிடைக்கும் பணத்தை நட்சத்திரேசனுக்குக் கொடுக்கும்படி சொல்லிச் சத்தியகீர்த்தியை வேண்டினான்; அப்போது மந்திரி, நட்சத்திரேசனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்திற்காகத் தன்னை யடிமையாக்குமாறு சொல்லி மன்னனை மன்றுடினான். அதற்கு அரசன் உடன்பட்டான் அல்லன்.

அரசனுடைய விருப்பத்திற் கிணங்கச் சத்தியகீர்த்தி, காசியம்பதியின் தெருக்கள்தோறும் அழைத்துச் சென்று அவனை விலை கூறினான். அதைப் பார்த்து வீரவாகு என்னும் புலையன் ஒருவன் சத்தியகீர்த்தியை யணுகி, அவனை நோக்கி, "எந்தச் சாதியினராயினும் விலை கொடுத்து நீர் விற்பவரை வாங்கிக் கொள்ளலாமோ?" என்று கேட்க, அதற்கு அமைச்சன், "எக்குலத்தினரே யாயினும் விலை கொடுத்துக் கொள்ளலாம்," என்று விடை யளித்தான்; "விலை என்ன?" என்று வீரவாகு கேட்க, "பதினுயிரம் பொன்," என்று சத்தியகீர்த்தி சொன்னான். மந்திரி, கேட்ட வண்ணமே பதினுயிரம் பொன்னைக் கொடுத்து அரிச்சந்திரனை யடிமை யாக்கிக் கொண்டான் வீரவாகு. அப் பதினுயிரம் பொன்னையும் சத்தியகீர்த்தி, நட்சத்திரேசனுக்குக் கொடுத்தனுப்பினான். மன்

னனை விட்டுப் பிரிய மனம்வராமல் சத்திய கீர்த்தி, மிக வருந்தினன் ; அழுதான் ; பித்தம் பிடித்தவனைப்போலப் பல தெருக்கள் தோறும் சென்று மூலைக்கு மூலை திரிந்து அலைந்தான். மன்னனை எத்தகைய வேலைக் குட்படுத்தி வீர வாகு வருத்துவானே என்று எண்ணி மனக் கலக்கங் கொண்டான்.

---

8. அரசன் சுட்லை காத்தல்

தன்னுடன் வேந்தனை யழைத்துச் சென்ற வீரவாகு, பிணங்கள் சுடுவதனல் முடை நாற்றம் வீசுவதும், செந்தீக் கொழுந்து விட்டு எரிவதுமாகிய சுடுகாட்டை யடைந்து, அதை அரிச்சந்திரனுக்குக் காட்டி, "வீரரே, இந்தச் சுடுகாடு எனக்குச் சொந்தமானது. இதை நீர் காத்திருப்பதற்காகவே நான் பணம் கொடுத்து உம்மை வாங்கினேன். இன்று முதல், இரவிலும் பகலிலும் நீர் இவ்விடத்திலேயே இருந்து இதைக் கருத்துடன் காக்கவேண்டும். இந்தச் சுடலையிற் சுடும் ஒவ்வொரு பிணத்திற்கும் ஒரு முழம் கொள்ளி யாடையும், காற்பொன்னும், வாய்க்கரிசியும் எனக்குச் சேர வேண்டிய முறையாகும். நீர் அவற்றைக் கவனத்துடன் பார்த்துப் பெற்று, காற்பொன்னையும் முழத் துண்டத்தையும் எனக்குக் கொடுத்து, வாய்க் கரிசியை

நீர் எடுத்துக்கொள்வீராக,'' என்று அரசனை நோக்கிக் கூறித் தன்னுடைய இருப்பிடத்தை நாடிச் சென்றான். மாற்றுயர்ந்த பசும் பொன்னால் செய்ததும், விளக்குக்களைப் போலச் சுடர் விட்டெரியும் பலவகை உயர்ந்த மணிகளால் இழைத்ததுமாகிய அழகிற் சிறந்த சிங்காசனத்தில் வீற்றிருந்து உலகத்தைக் காத்த மன்னன், பிணங்கள் சுடும் மயானத்தைக் காக்க நேர்ந்த விதியின் கொடுமைதான் என்னே! கடவுள் செயல் இப்படியும் இருப்ப துண்டோ?

மன்னனைப் பிரிந்த மந்திரி, தாய்ப் பசுவை விட்டுப் பிரிந்த இளங்கன்றைப் போல் வாடிப் பல இடங்கள் தோறும் சென்று அரசனைத் தேடி, மூலைக்கு மூலை யோடி யலைந்து, முடிவில் அம்மன்ன னிருந்த மயானத்தை யடைந்தான். அரசனை யணுகி, அவனுடைய நிலைமையைக் கண்டு மிக அழுது வருந்தினான். வேந்தனைப் பார்த்துச் சத்தியகீர்த்தி, "ஆ! ஆண்டவரே, கடவுளுக்குக் கண்கள் இலவோ? உம்முடைய நிலைமையைக் கண்டு அவர் எப்படி மனம் பொறுத்திருக்கின்றாரோ? உம்மை இந்நிலைமையிற் கண்டு யான் இன்னும் உயிர் விடாமலிருக்கின்றேனே! ஐயோ! யான் எத்தகைய கொடியவனா யிருக்கலாம்?'' என்று கூறிக் கண்களிலிருந்து நீர் வடிய நின்றான். அரசன் அமைச்சனை நோக்கி, "அறிவிற்

சிறந்தவரே, நீர் இங்ஙனம் அழுது வருந்து தல் அழகாமா? உம்முடைய புத்திக் கூர்மை எங்குச் சென்றதோ? நீர் ஏன் கவலைப் படுகின் றீர்? விதி யாரை விட்டது? எல்லாம் அறிந்த நீரே இப்படி வருந்தினால் மற்றையவர் என்ன செய்யமாட்டார்?'' என்று சொல்லி அமைச் சனைத் தேற்றினான். மந்திரி சிறிது மனத் தெளிவை யடைந்து மன்னனுடன் அச் சுடு காட்டிலேயே தங்கி யிருக்கலாயினான்.

அந்தணனுக்கு அடிமைப்பட்டு, அவனு டைய வீட்டை யடைந்த சந்திரமதியும், தேவ தாசனும் மிக்க துன்பத்திற் குள்ளாகி வாழ லாயினர். தாயும் மகனும் ஒவ்வொரு நாளும் விடியற்காலத்தில் எழுந்து அந்த அந்தண னுடைய வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்கி, நாள் முழுவதும் ஓய்வின்றிச் செய்து வருவா ராயினர். நாள்தோறும் சந்திரமதி, வீடு தொழுவம் முதலிய இடங்களை நன்றாய்ச் சுத்தி செய்து, அந்தணனுடைய மாடுகளின் சாணத் தை யெல்லாம் எடுத்துச் சேர்த்து எருமுட்டை தட்டுவாள்; உலக்கையைக் கையிற் பிடித்து அரிசி தீட்டுவாள்; காலகண்டனும், அவனுடைய மனை வியும் சொல்லும் பல குற்றேவல்களைச் செய்து முடிப்பாள். பையன் அந்தணனுடைய வீட் டுக்கு வேண்டிய விறகு, தருப்பைப்புல், மாவிலை முதலியவற்றைத் தேடிக் கொண்டு வருவான்;

அந்தணன் செய்யச் சொல்லும் மற்றைப் பல வேலைகளையும் அப்போதைக் கப்போது செய்து முடிப்பான்.

பலவகைச் செல்வங்களும் நிறைந்திருந்த அரண்மனையி லிருந்து மிக்க இன்பத்துடன் வாழ்ந்திருந்த சந்திரமதியும் தேவதாசனும் படாத பாடுகளெல்லாம் பட்டு வருந்தினர்; அந்தணனும் அவனுடைய மனைவியும் கால்க ளால் இடும் வேலைகளைக் கைகளால் செய்து வாழ்ந்திருக்கலாயினர். கேழ்வரகு மாவினால் ஆக்கிய கூழ் தவிர வேறு நல்ல சாப்பாடு அவர் களுக்குக் கிடைப்பது அருமையா யிருந்தது. காலகண்டனை விட அவனுடைய மனைவி சந்திரமதியையும் தேவதாசனையும் பலவாறு வருத்தி வந்தாள். தமக்கு நேர்ந்த துன்பங் களைக் குறித்து வருந்தாமலும், தரும வழியி லிருந்து தவறி நடக்காமலும் சந்திரமதியும்தேவ தாசனும் வாழ்ந்து வரலாயினர். அத்தகைய துன்பத்திற் குள்ளாயிருந்த காலத்திலும் அவ் விருவரும், பொய் பேசி யறியார்; விசுவாமித்திர முனிவரை நிந்தித்திலர்; காலகண்டனிடமும் அவனுடைய மனைவியினிடமும் வெறுப்புக் கொண்டனர் அல்லர். நல்லார் எத்தகைய துன் பங்களை யடைந்தாலும், தம்முடைய நற்குண நற்செய்கைகளி லிருந்து சிறிதும் மாறுபடார் என்பது இதனால் நன்றாய்த் தெரிகின்ற

தல்லவா ? நல்லார் எக்காலத்திலும் பெருமை யையும் இன்பத்தையும் அடைவார். பிறரைத் தாழ்த்திச் சொல்லாதாரே தீய வழியிற் செல்லாதாராவார்.

---

9. தேவதாசன் இறப்பு

காலகண்டனுடைய வீட்டிற் படாத பாடுகளைப் பட்டுக்கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் தேவதாசன், தன்னை யொத்த சிறுவர் சிலரோடு காட்டை யடைந்து, அந்தணனுடைய வீட்டிற்கு வேண்டிய விறகுகளைத் தேடிச் சேர்த்து, அவற்றை ஒரு சுமையாகக் கட்டித் தன்தலைமீது அச் சுமையைத் தூக்கிக்கொண்டு திரும்பிவரத் தொடங்கினான். அவன் வந்த வழியின் பக்கத்தில் ஓர் இடத்தில், ஒரு புற்றின்மீது தருப்பைப் புல் செழித்து ஓங்கி வளர்ந்திருந்தது. அதைப் பார்த்துத் தேவதாசன், "ஐயோ! விறகுகளை மட்டும் கொண்டு போனால் மறையவர் சினங் கொண்டு என்னைத் திட்டத் தொடங்குவாரே! இதோ காணும் இத் தருப்பையையும் அறுத்துச் சென்றால் என்னிடம் அருவருப்புக் கொள்ளாமல் இருப்பார் அவர்," என்று எண்ணித் தன் தலைமேல் இருந்த சுமையை யிறக்கிக் கீழே வைத்துவிட்டு, தருப்பைப் புல் அடர்ந்து வளர்ந்திருந்த புற்றை யணுகி, அப்புற்களைப் பற்றிப் பறித்தான். அப்போது, அந்தப் புற்றி

லிருந்த கொடிய பாம்பு ஒன்று, சீறிவந்து தேவதாசனுடைய காலில் தீண்டிற்று. உடனே அவன், அஞ்சித் துடிதுடித்தான்; அலறி அப் புறம் ஓடி வந்தான்; நடுநடுங்கிக் கீழே விழுந் தான்.

தேவதாசன் தருப்பை பறித்தபோது, அவ னுடன் சென்றிருந்த சிறுவர் எல்லாரும் ஒரு பழு மரத்தின்கீழ் நின்றிருந்தனர். தேவதாசன் அலறியோடி நடுங்கிக் கீழே விழுந்ததைக் கண்டு அச்சிறுவர் அனைவரும், பதைபதைத் தோடித் தேவதாசனை யணுகி, அவனை நோக்கி, "ஐயோ! அப்பா! தேவதாசா, உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் அலறியோடிக் கீழே விழுந்தாய்? யாரா யினும் உன்னை யதட்டிப் பயமுறுத்தினரா? எதையேனும் கண்டு பயந்தனையா? உனக்கு நேர்ந்ததை எங்களிடம் விரைவிற் சொல்; உனக் குண்டான துன்பத்தைப் போக்க முயல்கின் றோம்," என்று கேட்டனர். அச்சிறுவரை நோக்கித் தேவதாசன், "ஆ! தோழர்களே, எனக்கு நேர்ந்த தீங்கை என்னென்று சொல்லு வேன்? அதோ இருக்கும் அந்தப் புற்றுக்குள் இருந்த பாம்பு ஒன்று வெளியே வந்து, என் னைக் கடித்துவிட்டது. என்ன செய்வேன்!" என்று சொன்னான். விஷம் தலைக்கேறியதால் அப்பொழுதே அவன் அறிவு சோர்ந்து உயிர் விட்டான்.

தேவதாசன் உயிர் துறந்ததைக் கண்டு, அவனுடன் வந்த தோழர் எல்லாரும், அஞ்சித் திடுக்கிட்டனர்; துடிதுடித்தனர்; அழுதனர்; தேவதாசனுடைய உடலைப் புரட்டிப் பார்த்து, "ஐயோ! என்ன செய்வது? இச்சிறுவன் திக்கற்ற பிணமாயினனே," என்று சொல்லி, மதிமயங்கி நின்றனர். தன்னுடைய குலத்திற் பிறந்த செல்வப் புதல்வன் இறந்ததைக் கண்டு, மனம்பொறுமல் புலம்பிச் செல்பவனைப்போலச் சூரியனும் மேல் கடலில் ஆழ்ந்தான். தேவதாசனுடைய நண்பர், "இராப்பொழுது நெருங்கிற்று. இனி, இங்கு இருத்தல் கூடாது. விரைவில் நகரத்தை யடைந்து, தேவதாசனுடைய செய்தியைச் சந்திரமதிக்குத் தெரிவிப்போம்," என்று கூறி, தத்தம் விறகுக் கட்டுக்களைத் தூக்கிக் கொண்டு, காசிப் பட்டணத்தை நோக்கி நடந்தனர்.

வைகறையில் எழுந்து காட்டை நாடிச் சென்ற தன் அருமைமைந்தன், சூரியன்மறைந்த பிறகும் வீட்டுக்குத் திரும்பி வராமையைப் பற்றிச் சந்திரமதி, மிக்க மனக்கலக்க மடைந்தாள்; அடிக்கடி தெருவிற் சென்று தன் மகன் வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்து நின்றாள்; தன்னுடைய அருமைப் புதல்வன் வராமையைக் குறித்துத் துக்கித்தாள். அந்த மங்கை, "காட்டுக்குச் சென்ற என்னுடைய

செல்வப் புதல்வன் இன்னும் வீட்டுக்குத் திரும்பி வராததன் காரணம் யாதோ? அவனுடன் சென்ற அந்தணச் சிறுவருள் ஒருவரும் திரும்பி வந்திலரே! எல்லாப் பிள்ளைகளும் ஒன்றுகூடிக் காட்டின் நடுவிற் போய்த் திரும்பி வர வழி தெரியாமல் திகைக்கின்றார்களோ? எந்தச் சிறுவனுக்கு என்ன கெடுதி நேர்ந்ததோ? காட்டிலிருக்கும் புலி, கரடி, ஓநாய் முதலிய கொடிய விலங்குகளால் சிறுவர்களுக்கு யாதாயினும் துன்பம் உண்டாயிற்றோ? பசிநோயால் என்னுடைய மைந்தன் களைப்படைந்து எங்கு அலைகின்றானோ?" என்று பலவாறு தன்னுடைய மனத்தில் எண்ணி யேங்கினாள்; தெரு வழியே போய்த் தேவதாசனைத் தேட நினைத்தாள்; காலகண்டன் பார்த்தால் யாதாயினும் சொல்வான் என்று மனத்திற் கொண்டு அவனுடைய வீட்டுக்குட் சென்றாள். அவளுடைய உயிர் தேவதாசனிடமும், உடம்பு அந்தணனுடைய வீட்டிலுமாக ஊசலாடிக்கொண்டு இருந்தன.

10. சந்திரமதியின் புலம்பல்

பொழுது பட்டு நெடுநேரமாகியும் தன்னுடைய மைந்தன் வீட்டுக்கு வராமையைக் கண்டு மிக்க மனக் கலக்க மடைந்த சந்திரமதி,

ஏங்கிக் கண்களில் நீர் பெருகிச் சொரியத் துக கித்தாள்; அந்தணனுடைய வீட்டின் வாயிற் படியில் வந்து நின்றாள்; தெருவிற் சென்று நான்கு பக்கங்களிலும் திரும்பிப் பார்த்தாள். அப்போது, காட்டிலிருந்து காசிக்குத் திரும்பி வந்த தேவதாசனுடைய தோழர் அனைவரும், அத் தெருவழியே வரலாயினர். அப் பிள்ளை கள் சிறிது தூரத்தில் வரக்கண்ட சந்திரமதி, அணையை யுடைத்துச்செல்லும் வெள்ளத்தைப் போல் மிக்க பரிவுடன் அந்தச் சிறுவர்களை யெதிர் நோக்கிச் சென்று கண்டாள்; தன்னு டைய புதல்வன் அப்பிள்ளைகளுடன் வரப் பார்த்திலள்; அதனால், முன்னிலும் மிக்க மனக் கலக்க மடைந்தாள்: அம் மங்கையைக் கண்டு அந்தணச் சிறுவரும் மிக்க அச்சங் கொண் டனர்.

இளங்கன்றைத் தேடும் பசுவை யொத்த சந்திரமதி, சால வணக்கத்துடன் கைகளைக் கூப்பி அந்தணச் சிறுவரை நோக்கி, "மறை யவர் மக்களே, உங்களுடன் காட்டிற்குச் சென்ற என்னுடைய செல்வப் பிள்ளை எங்கே இருக் கின்றான்? உங்களோடு அவன் திரும்பி வராத தேன்?" என்று கேட்க, அந்தப் பிள்ளைகள், அச்சத்துடனும் தாழ்ந்த குரலுடனும் தேவ தாசனுடைய தாயைப் பார்த்து, "அம்மா, உம் முடைய அருமைப் பிள்ளைக்கு நேர்ந்த கொடு

மையை என்னென்று சொல்லுவோம்? அரவு கடிக்க அவன் இறந்துபட்டான். நாங்கள் என்ன செய்வோம்? மனம் நொந்து அழுது புலம்பினோம்; உம்மை நோக்கி இங்கே ஓடி வந்தோம். ஐயோ! கடவுளுக்குக் கண்கள் இருக்கின்றனவா? இருந்தால், அவர் இப்படியும் செய்து பார்ப்பாரா?'' என்று கூறினர்.

தன் மைந்தன் இறந்தான் என்னும் செய்தியைக் கேட்டவுடனே, சந்திரமதி, இடியோசையைக் கேட்ட பாம்பைப் போல் வெருண்டாள்; பெருமூச்செறிந்தாள்; "ஆ மகனே! அப்பா மகனே!! ஐயோ மகனே!!! தேவதாசா!'' என்று சொல்லிக் கதறினாள்; மனம் பதைக்க, உயிர் துடிக்க, உடல் நடுங்க, அறிவு சோர்ந்து அடியற்ற பனைமரம் போலக் கீழே விழுந்தாள்; மூர்ச்சை யடைந்தாள். அத் தெருவூடு வந்த மக்கள் பலரும், பார்ப்பனச் சிறுவரும் பலவாறு தேற்ற அம்மாது, சிறிது மனத்தெளிவடைந்து மற்றும் அந்தணச் சிறுவரை நோக்கி, "என் மகன் எந்த இடத்தில் இறந்து கிடக்கின்றான்?'' என்று வினவ, அப்பிள்ளைகள், இத் தெருவினின்று தொடர்ந்து போகும் வழி யொன்று காட்டிற்குட் செல்கின்றது; காட்டினுள் அவ்வழியே சிறிது தூரம் சென்றால், அங்கே பெரியதோர் ஆலமரம் இருக்கின்றது; அம்மரத்தின் பக்கத்தே வடக்குத் திசையில் தருப்பைப் புல்

நன்ருய்ப் படர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கும் மேடு ஒன்றுள்ளது ; அம் மேட்டுக்குத் தென் புறத்தில் இறந்த உம்முடைய மைந்தன் கிடக்கின்ருன்,'' என்று மறு மொழி பகர்ந்து, தத்தம் வீடுகளை நோக்கிச் சென்றனர்.

மண்ணிற் புரண்டு பலவாறு கூறி மனமுருகி யழுதாள் சந்திரமதி. தன்னை அடிமையாகக் கொண்ட அந்தணனுக்கு அஞ்சி அவள், பெருங் குரலெடுத்து அழாமல் எழுந்து, காலகண்டனுடைய வீட்டை நாடிச் சென்ருள் ; அவ் வீட்டினுள், தான் செய்ய வேண்டிய ஊழியங்களை யெல்லாம் விரைவிற் செய்து முடித்துக் காலகண்டனை யணுகிக் கை கட்டி வாய் புதைத்து அழுது வருந்தி, அவனை நோக்கி மிக்க பணிவுடன், ''வேதியரே, தங்களுக்கு வேண்டிய தருப்பை முதலியவற்றைக் கொண்டு வரக் காட்டையடைந்த என் புதல்வன், பாம்பு கடிக்க இறந்தானும். அவனை எடுத்து யான் அடக்கஞ் செய்து வரத் தாங்கள் அனுமதி யளிக்க வேண்டுகின்றேன்,'' என்று மொழிந்தாள்.

அம் மொழிகளைக் கேட்ட அந்தணன், எல்லையற்ற சினங் கொண்டான் ; புருவங்கள் நெற்றியிலேறக் கண்களை யுருட்டிப் பார்த்தான்; கடுஞ் சொற்கள் பலவற்றைக் கூறினன் ;

பாம்பைப் போலச் சீறினான்; மிகவும் அச்சுறுத்தினான். சந்திரமதியை நோக்கி அவன், "அடீ பயனற்றவளே, உன் மைந்தன் இறந்தால் என்னுடைய பொருளுக் கல்லவா அழிவு நேரிட்டது? உனக்கென்ன குறை நேர்ந்தது? என் பணத்துக்குக் கெடுதி யுண்டானதால், யான் அல்லவா அழ வேண்டும்? நீ ஏன் வீணாக அழுகின்றாய்? எனக்கு அடிமைப்பட்ட அந்தப் பையனுக்குத் தாயும் ஒருத்தி யிருக்கின்றாளா? என் வீட்டு வேலைகளை விட்டு, இறந்தவனை யெடுத்து அடக்கஞ் செய்ய நீ போகக்கூடாது," என்று சொன்னான். பின்னும் சந்திரமதி அந்தணனை நோக்கி, "அன்புள்ள ஐயரே, என் மைந்தன் தங்களுக்கு அடிமையே யாயினும், கானகத்தில் அவன் இறந்து திக்கற்ற பிணமாய்க் கிடக்கின்றான் என்னும் செய்தியைக் கேட்டு, அவனைப் பெற்ற என்னுடைய வயிறு பற்றி எரியாதோ? புனிதரே, அன்பு கூர்ந்து யான் போகக் கட்டளை யிடுவீர்; ஓடிப் போய் என் மகனை யெடுத்து அடக்கஞ் செய்து நாளைப் பொழுது விடியு முன் தங்கள் வீட்டுக்குத் திரும்பி வருகிறேன். நாளைக் காலையிற் செய்ய வேண்டிய தங்களுடைய வீட்டு வேலைகளை இடையூறின்றிச் செய்து முடிக்க உண்மையாக யான் இங்கிருப்பேன். யான் செல்ல அருள் புரிவீர்," என்று கூறி இறைஞ்சி நின்றாள்.

சிறிது மனமிரக்கங் கொண்டு மறையவன் சந்திரமதியைப் பார்த்து, "என்னுடைய வீட்டில் நீ செய்யவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. அவ்வேலைகளைச் செய்தற்குத் தடையின்றி நாளைக் காலைப் பொழுதில் இங்கு வந்திருக்கக் கூடுமானால், நீ இப்பொழுதே போகலாம்," என்று சொல்ல, சந்திரமதி உடனே புறப்பட்டு விரைந்து நடந்து, காசியம்பதியைக் கடந்து காட்டை யடைந்தாள்; அடிதோறும் கண்ணீர் பெருகச் செடிதோறும் தன் மைந்தனைத் தேடி யலைந்தாள். "பாவியாகிய யான் பெற்ற புதல்வனே! நீ எங்கே இருக்கின்றாய்!" என்று சொல்லிக் கூவினாள்; பதைபதைத்துப் பன்முறையும் கீழே விழுந்து புலம்பினாள்; தன்னுடைய மெல்லிய கைகளால் தன் முகத்தில் அறைந்து கொண்டாள்; தாவிப்போய் அப்புறத்து விழுந்து எழுந்தோடினாள்; பதறியும் கதறியும் அழுது ஏங்கினாள்; உயிரைத் தேடி அலைகின்ற உடம்பைப் போல் அலைந்து சென்றாள்.

பொறுத்தற்கரிய மன வருத்தத்துடன் சந்திரமதி யலைந்தோடிய காலத்தில், பல முட்செடிகள் அவளுடைய உடம்பிற் பட்டன; முட்களால் கீறப்பட்டு அவளுடைய உடலிலிருந்து செந்நீர் பெருக் கெடுத்து ஓடலாயிற்று; அப்பெண்மணி யணிந்திருந்த ஆடை,

முட்களாலும் செடிகளாலும் பலவாறு கிழிப் புண்டு சிதைந்தது. அந்நங்கையின் அழகிய நீண்ட கூந்தல் சின்ன பின்னப்பட்டது. அம் மாதின் மெல்லிய காலடிகளிற் கற்களும் முட் களும் உறுத்திப் பெருந்துன்பம் விளைவித்தன. மனமுருக, உடல்கருகி வாடத் தேவதாசனைத் தேடிச்சென்ற சந்திரமதி, பார்ப்பனச் சிறுவர் குறிப்பிட்டுச் சொன்ன இடத்தை யடைந்தாள்; ஆலமரத்தைப் பார்த்துப் பதைத்தாள்; அம் மரத்தின் கீழ் தன் மைந்தன் வைத்த விறகுச் சுமையைக் கண்டு கதறினள்; அதனருகில், கழுகுகளும் பேய்களும் நரிகளும் பூதங்களும் நெருங்கிக் கூடியிருந்த கூட்டத்தின் நடுவில் தன் செல்வக்குழந்தை கிடந்ததைப் பார்த்தாள்; உயிரும் உடலும் துடிக்க ஓடித் தன் மைந்தனி டம் விழுந்தாள்; ஓவென அரற்றி யழுதாள். மகனிடம் வைத்திருந்த ஆசை, அவள் உயி ரைக் கொள்ளை கொண்டது.

அரசிளங் குமாரனைச் சூழ்ந்திருந்த கழுகு நரி முதலியன வெல்லாம் அஞ்சி அப்புறத் தோடின. பன்முறை பூமியிற் புரண்டு புலம்பி வருந்திய பின்னர்ச் சந்திரமதி, முழங்காலிட்டு உட்கார்ந்து, தாமரைமலர்போன்ற தன்னுடைய கைகளால், மரித்தமகனை வாரியெடுத்துமடிமேல் வைத்துக் கொண்டு, தேவர்களும் மயங்கி யழும் வண்ணம் தன் மைந்தனை நோக்கி, வாயைத்

திறந்து, " ஆ மகனே! அருமையாகப் பெற்று வளர்த்த அழகனே! மாந்தளிரைப் போன்ற உன்னுடைய உடம்பு பனியினால் நனைந்தும், வெயிலினால் காய்ந்தும், பசியினால் வருந்தியும், கொடிய கண்களை யுடைய பாம்பினால் கடிக்கப் பட்டும் நீ இறக்க, நான் எத்தகைய கொடிய பாவத்தைச் . செய்தேனோ? கொடிய நஞ்சு படைத்த பாம்பு கடித்ததனால் உன்னுடைய உடம்பு எவ்வாறு நொந்து துடித்ததோ? தனியே இந்த இடத்திற் கிடந்து நீ எப்படி மண்ணிற் புரண்டு உயிர் விட்டனையோ? இனி யாருடைய வாழ்வின்பொருட்டு நான் உயிரை வைத்திருப்பேன்? நானும் என்னுடைய நாயக ரும் இனிமேல் உயிருடன் இருத்தல் வீணே யல்லவா? நிறைந்த ஓசையை யுடைய பலவகை வாத்தியங்களுடைய முழக்கங்கள் இல்லாமல், வரிசையாகக் கழுகுகள் உட்கார்ந்து சிறகுகளை யடித்துக்கொள்வதனால் உண்டாகும் ஓசைக்கு இடையே நீ உயிர்விட நான்முகக்கடவுள் எங் ஙனம் விதித்தானோ? ஓர் அந்தணன் இரக்க, வளப்பம் பொருந்திய தம்முடைய நாடு முழு வதையும் கொடுத்த ஒப்பற்ற வள்ளல் பெற் றெடுத்த மைந்தனே! உனக்கு இப்படியும் கட வுள் விதித் திருந்தாரா?

" வானகத்தி லிருந்து பெய்யும் மழையைப் போல் என் கண்களிலிருந்து நீர் வடியவும்,

என் உடம்பிலுள்ள தசை யற்று விழவும், உடம்பு முழுவதும் செந்நீர் பெருக் கெடுத்துச் சொரியவும், இந்த இராப் பொழுதில் நான் ஒருத்தி தனியே இவ்விடத்தை யடைந்தும், நன்ருகக் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பி லிட்ட தளிரைப்போல் வாடியும் விதியை நொந்து அழுகிறேனே! என்னுடைய நிலைமை யைக்கண்டு நீ வாய் திறவாமல் இருப்ப தேனே? உன்னுடைய மனம் எப்படி ஆறுதல் அடைந் திருக்கின்றது? அப்பா! தாமரைப் பூவைப் போன்ற முகத்தை யுடைய செல்வக் குழந் தையே! மனு நீதியினின்று சிறிதும் தவருமல் செங்கோல் செலுத்தியவரும், அறிவிற் சிறந்த வரும், வெவ்விய சினத்தையுடைய யானையின் மீது ஏறிச் செலுத்துகின்றவரும், வீரத்திலும் வெற்றியிலும் மிக்கவருமாகிய நம்முடைய அர சர், தாம் பட்ட கடனைக் கொடுத்து நம் மிரு வரையும் மீட்டுச் செல்ல வரும்போது, மிக்க மன மகிழ்ச்சியுடன் என்னை நோக்கி, 'அருமருந் தன்ன என் அன்பார்ந்த மைந்தன் எங்கே?' என்று கேட்டால், யான் அவருக்கு மறுமொழி யாது கூறுவேன்!

"ஐயோ! வீணுக இக்காட்டில் ஒரு கொடிய பாம்பினுல் உயிரைவிட்ட என் குலக்கொழுந்தே! நீர் நிரம்பிய குளங்கள் நிறைந்த கோசல நாடு முழுவதையும் தவமுனி ஒருவனுக்குக் கொடுத்து

விட்டாலும், உலகத்தை யாளும் செல்வமும் தன்மையும் உனக்கு இல்லாமற்போகவில்லையே! உன் தந்தையாரைப் போலவே பெரிய தொரு நாட்டை யாளும் என் தந்தை இறந்த பின்னர், வேளாளர்கள் ஏர்களை யோட்டுகின்ற பேரோசை ஓயாதிருக்கத்தக்க நீர் நில வளப்பங்களைப் படைத்த கன்னேசி நாட்டை யாளுவதற்கு உரியவராய் உன்னை யன்றி வேறு யார் இருக்கின்றனர்? நானும், உன்னுடைய தந்தையும் நல்ல நூல்களைப் படித்தறிந்த பெரியார்கள் சொன்ன முப்பத்திரண்டு தருமங்களுள் ஒன்றையும் விடாமல் குறைவின்றிச் செய்தோமே! எங்களுடைய குடிகளிட மிருந்து ஆறிலொரு பங்குக்கு மேல் பகுதிப் பொருளை வாங்க எந்நாளிலும் எண்ணியும் அறியோம்; எக்காலத்தும் பொய் சொல்லி யறியோம்; பிச்சை கேட்பவருக்கு எப்பொழுதும் இல்லை யென்று மறுத்துச் சொன்னேம் அல்லோம்; முற்றும் துறந்த பெரியார் மொழிந்த நீதிச் சொற்களைக் கடந்து யாதொரு வேலையும் செய்து அறியோம்.

"எளியவரை எப்பொழுதும் இகழ்ந்து பேசியறியோம்; கொடியவரை நம் நாட்டிற் குடி வைத்திலோம்; அப்பா குழந்தாய்! உனக்கு இக்கொடுமை எதனல் உண்டாயிற்ரு? ஆ கடவுளே! எங்களுக்கு இத்துன்பம் எதனல் விளைந்தது? உம்முடைய திருவருள் இப்

படியும் உண்டோ? கௌசிக முனிவனுடைய சூழ்ச்சி உம்முடைய கட்டளையினும் மிக்க வல்லமையை யுடையதாய் இருக்கின்றதே! அந்த முனிவனுக்கு நாங்கள் என்ன கெடுதி செய்தோம்?'' என்று பலவாறு வாய்விட்டுக் கதறிப் புலம்பினாள்; மூர்ச்சித்து மண்ணில் வீழ்ந்தாள்.

11. இறந்த மகனை மன்னன் காணல்

அழுது வருந்தி மூர்ச்சித்து விழுந்த சந்திரமதி, சிறிது நேரம் கழிந்த பின்னர் ஒருவாறு தெளிவடைந்தாள்; பலவாறு எண்ணி யேங்கினாள்; விதியை நொந்து வருந்தினாள்; பொழுது விடியுமுன் அந்தணனுடைய வீட்டிற்குச் செல்லவேண்டுமே என்பதை யெண்ணி யஞ்சினாள்; மரித்த மகனை யெடுத்துத் தோள் மீது சுமந்து, தள்ளாடி மெல்ல நடந்தாள்; சுடுகாட்டைத் தேடிப் போனாள். விசுவாமித்திர முனிவன் அப்பொழுதும் பேய்களையும் நாய்களையும் ஏவி அம்மங்கைக்குப் பல துன்பங்களை யுண்டாக்கினான்.

இருள் நிறைந்த அந்த இராக்காலத்தில் முனிவனால் உண்டான துன்பங்களுக்கு மனம் சலித்தலின்றிச் சந்திரமதி, தன் மகன் இறந்த

மையைக் குறித்துத் துக்கித்துக்கொண்டே சென்ருள்; கால்களால் தடவி வழியைக் கண்டு நடந்தாள்; சிறிதுநேரத்திற்குள் காட்டைக்கடந்தாள்; காசி நகரத்தைச் சேர்ந்த சுடுகாட்டை யணுகினுள்; பிணங்களை யெரிக்கக்கொளுத்தியநெருப்பு, நன்ருய்க் கொழுந்துவிட்டு மிக்க ஒளியுடன் எரிந்து கொண்டிருந்ததையும், பிணங்கள் வெந்து தலைகள் உடைந்ததனுல் உண்டான ஓசையையும், மிக்கமுடைநாற்றம் வீசிக்கொண்டிருந்ததையும் கண்டு, தான் அடைந்த இடம் சுடுகாடாகும் என்பதை மனத்தில் உறுதியாகக் கொண்டாள்; தோண்மீதிருந்த தன் மகனை அச்சுடலையில் ஓர் இடத்தில் இறக்கித் தரையில் வைத்தாள்; கடவுளுடைய திருவடிகளையே துணையாகக் கொண்டு நான்கு பக்கங்களிலும் விரைந்து சென்று, பிணங்களைச் சுட்ட இடங்களில் எரிந்து குறைந்து கிடந்த கொள்ளிக் கட்டைகளைச் சேர்த்துக் கொணர்ந்தாள்; நன்ருய் அடுக்கி அக் கட்டைகளின்மீது தன் மகனைப் படுக்க வைத்தாள்; அழுது வருந்தித் தீ மூட்டினுள்; கைகளைத் தலையில் மோதியடித்து, மண்ணில் விழுந்து புரண்டு கதறினுள்.

சந்திரமதி இட்ட நெருப்பு நன்ருய்ப் பற்றி யெரியத் தொடங்கியது. பரண்மீது அமர்ந்து அந்தமயானத்தைக்காத்திருந்தஅரிச்சந்திரன், அத்தீயைக் கண்டான். பாம்பு

கடிக்கத் தன்மகன் இறந்தான் என்பதையறியாத அந்த அரசன், மிக்க சினங் கொண்டான்; பரணை விட்டுக் கீழிறங்கினான்; 'இந்த இராக் காலத்தில் திருட்டுத் தனமாக யாரோ பிணத் தைக் கொண்டுவந்து சுடுகின்றனர்; அவரைப் பார்த்து வருவேன்,' என்று எண்ணி விரைந்து நடந்து தன் மகன் எரிந்து கொண்டிருந்த இடத்தை யடைந்தான்; அங்கிருந்த சந்திர மதியை நோக்கி, "என்னடீ மூடப்பெண்ணே! எனக்குக் கொடுக்க வேண்டிய பொருளைக்கொடா மல் கள்ளத்தனமாய் இருட்டில் என்னுடைய கட்டளையின்றி நீ பிணத்தைக் கொண்டு வந்து இங்குச் சுடுகின்றனையே. உனக்கு இச்செயல் அடுக்குமா?" என்று சொல்லிக் காலை வீசி நெருப்புக்கிடையில் இருந்த பிள்ளையை யெடுத் தெறிந்தான்.

அச் செயல்களைக் கண்டு சந்திரமதி, வலை யிற் பட்ட மானைப்போலப் பதைத்துக் கீழே விழுந்து, அழுது எழுந்து, வாய் குழறத் தன் முன் நின்ற ஆடவனை நோக்கி, "ஐயா, யான் ஒரு திக்கற்ற பெண்ணாவேன். மேலும் இவ் வூர் வழக்கத்தை யான் அறியேன்; பணமும் உறவினரும் இருப்பின், இறந்த என் மகனைத் தனியே யான் தோள்மீது தூக்கி இந் நடு இர வில் இங்கு வந்து சுடுவேனோ? இவற்றை யெல் லாம் நீர் நன்றாய் ஆராய்ந்து பார்த்து என்

மைந்தனைச் சுடக் கட்டளை யிட்டு அருள்வீர்,'' என்று சொல்லி வேண்டினுள். இருளில் ஒரு வரை யொருவர் அறிதற் கியலாமையால் அரிச் சந்திரன், பிணமாய்க் கிடந்தவன் தன் மகன் என்பதையும், எதிரில் நின்றவள் தன் மனைவி என்பதையும் அறியாதவனுய், அம்மங்கையை நோக்கி, "அம்மா ; நீ சொல்வது உண்மையா யிருக்கலாம். யான் ஒரு புலையற்கு அடிமைப் பட்டவனுவேன். ஆதலால், நான் என்ன உதவி உனக்குச் செய்யக்கூடும்? இங்குக் கொடுக்கப் படும் காற் பொன்னும் கொள்ளித் துண்டமும் என் தலைவற்குச் சேரவேண்டியனவாம் ; வாய்க் கரிசி எனக் குரியதாகும்; ஆதலால், என் தலைவற் குச் சேர வேண்டியவற்றை மாத்திரம் கொடுத்து உன் பிள்ளையைச் சுட்டுச் செல்வாய்,'' என்று கூறினுன்.

அச்சொற்களைக் கேட்டுச் சந்திரமதி, "ஐயா பெரியாரே, பணமும் உறவினரும் இல்லாமையி னுலே இறந்த என் மைந்தனைச் சுடக்கருதித் தோள்மீது தூக்கித் தனியே யான் இங்கு வந் தேன். சுழல்காற்றில் அகப்பட்ட பஞ்சைப் போல் அலைந்து வருந்துகின்ற அடியாளிடம் இரக்கங்கொண்டு பிள்ளையை யெரித்துச் செல் லக் கட்டளை யிடுவீர்,'' என்று கேட்டு இறைஞ் சினுள். நெருப்பினுடைய வெளிச்சத்தின் உதவி யால் உற்றுப் பார்த்து அம்மாதை நோக்கி

அரிச்சந்திரன், "நீ மிகக் கெட்டிக்காரியா யிருக்கிறாய்! பெண்களெல்லாரினும் நீ மிக வல்லவளாவாய். பொய்பேசுதலில் நீ கைதேர்ந்தவளாயிருக்கின்றாய்! பணமில்லை யென்று நீ சொல்வது சிறிதும் ஒத்துக்கொள்ள முடியாததாயிருக்கின்றது. விளக்கைப்போல் ஒளிவீசும் உயர்ந்த பொன்னாற் செய்த தாலிக்கயிறு உன் கழுத்தில் இருக்கின்றதே. அதைக் கொடுத்து உன் மகனைச் சுட்டுப் போவாய்," என்று சொன்னான்.

சந்திரமதி துடிதுடித்துப் பதறிக் கீழே விழுந்தாள்; "அரிச்சந்திர மன்னருக்கு அன்றி வேறு எவருக்கும் பார்க்க முடியாத தாலிக்கயிற்றை இன்று ஒரு புலையன் காண நேர்ந்ததென்ன காலக் கேடோ? பரமசிவனுடைய திருவாக்கும் பொய்யாய்ப் போயிற்றே," என்று சொல்லி அழத் தொடங்கினாள். அதைக் கேட்டதும் அரிச்சந்திரனுடைய மனம் திடுக்கிட்டது. அவன் கையிலிருந்த நீண்ட தடி கீழே விழுந்தது. இறந்துபட்டவன் தன் அருமைப் பிள்ளை என்றும், அப்பிள்ளையைச் சுடத் தூக்கிவந்தவள் தன் மனைவி என்றும் அம்மன்னன் உணர்ந்தான்; அடியற்ற நெடு மரத்தைப்போலக் கீழே விழுந்தான்; பலவாறு கதறி யழுதான்; மெய்ம்மறந்து மூர்ச்சை யடைந்தான்.

அன்னோன் தன் கணவன் என்பதையறிந்து சந்திரமதி, அவன் பக்கலிற் சென்று பணி

யிற்றி மூர்ச்சையினின்று அவனைத் தெளிவடை யச் செய்தாள்; வணக்கத்துடன் அவனை நோக்கி, "என் ஆருயிர்த் தலைவரே, இச் சுடுகாட்டைக் காக்க ஆண்டவன் எப்படி மனமிசைந்து தமக்கு அருள் புரிந்தானோ? பாம்பு கடிக்க இறந்த நம் மைந்தனுக்காகத் தாம் எத்தனை நாள் அழுது வருந்தினும் பயன் யாதேனும் உண்டாகுமோ? தாமே இவ்வாறு மனந் தளர்ந்து அழுது வருந்தினல் என்னைப் போன்ற பேதை யாது செய்வாள்? வருந்த வேண்டாம்; எழுந்திருப்பீர்; எஃது எவ்வாறு யினும் நாம் அறநெறியினின்று மாறுபடாமல் நடக்க முயல்வோம்," என்று உரைத்தாள்.

மன்னன் எழுந்து உட்கார்ந்து, தன் மனை வியை நோக்கி, "அறிவிற் சிறந்த நாயகியே, உன் சொல் உயர்ந்ததே யாகும். அறநெறிக் கிணங்க நடப்பதே நாம் மேற்கொண்ட நோன் பாகு மன்றோ? நம்முடைய மைந்தனை இங்குச் சுடவேண்டுமாயின் இச்சுடுகாட்டிற்கு இறைவ னும், என்னை யடிமையாகக் கொண்டவனு மாகிய வீரவாகுக்குக் கொள்ளி யாடையும் காற் பொன்னும் செலுத்த வேண்டியது கடமை யாகும். ஆதலின், நீ விரைந்து போய் உன்னை யடிமையாகக் கொண்ட அந்தணனிடம் கேட்டு அவற்றைப் பெற்று வருவாய்," என்று கூறி னன். தன் கணவன் சொல்லுக் கிணங்கச் சந்

திரமதியும் அப்பொழுதே புறப்பட்டுக் காசியம் பதியை நோக்கிச் சென்றாள்.

---

12. உண்மையினுடைய உயர்வு

அயோத்தி இளவரசனை இறக்கச் செய்த பின்னரும் கௌசிகமுனிவன் மனவமைதியுடன் இருந்திலன். அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் மற்றும் பல துன்பங்களை யுண்டாக்க அம்முனிவன் எண்ணங் கொண்டான். காற்பொன்னும் கொள்ளியாடையும் பெற்றுவர அந்தணனுடைய வீட்டை நாடிச் சந்திரமதி சென்ற போது அம்முனிவன் கள்வர் சிலரை ஏவித் தாய் தந்தையருக் கிடையே அரண்மனையிற் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்த காசி வேந்தனுடைய பிள்ளையைக் களவாடிக் கழுத்தை முறித்துச் சந்திரமதிக்கு எதிரில் எறிந்து விட்டுப் போகச் செய்தான். நிறைந்த இருளில் காசிமா நகரத்தில் ஒரு தெருவழியே நடந்து சென்ற சந்திரமதியின் காலில் காசி மன்னனுடைய அருமை மைந்தன் பட்டனன். திடுக்கிட்டுச் சந்திரமதி, அம்மகனைத் தன் இரண்டு கைகளாலும் வாரியெடுத்து நன்றாய்த் தழுவிப்பார்த்து, நாயோ அன்றி நரியோ சுடுகாட்டி லிருந்த தன் மகனைக் கௌவிக் கொணர்ந்து அங்குப் போட்டுச் சென்றது என்று எண்ணி யழுதாள்.

அரண்மனையில் தம்முடன் படுத்திருந்த மைந்தன் காணாமையால் காசி நகரத்து அரசனும், அவனுடைய மனைவியும் திடுக்கிட்டு எழுந்து அரண்மனை முற்றிலும் தேடிப்பார்த்தனர்? பதைத்தழுதனர்? காவலரை யழைத்து அந்நகர முழுவதிலும் தேடிப்பார்த்துத் தம் மகனைக் கண்டு பிடித்து வரும்படி கட்டளை யிட்டனர். அந்நகரத்தில் நான்கு பக்கங்களிலும் காவலர் ஓடிப்போய் மன்னன் மைந்தனைத் தேடத்தொடங்கினர். அவருட் சிலர் சந்திரமதி இருந்த இடத்தை யடைந்தனர்; அம்மாதின் கையிலிருந்த இறந்த மகனைப் பார்த்தனர்; அக்குழந்தை தம்முடைய அரசன் அருமையாகப் பெற்றுப் பெருமையுடன் வளர்த்த பிள்ளையென அறிந்தனர்; சந்திரமதியை வெருட்டி அக்குழந்தையுடன் தம்முடைய அரசனிடம் அழைத்துச் சென்றனர்; அம்மங்கையே குழந்தையைத் திருடிக் கொன்றவள் என்று சொல்லினர்.

சந்திரமதியை நன்றாக உற்றுப் பார்த்து, "அம்மா, நீ யாவள்?" என்று அம்மங்கையை நோக்கிக் காசி வேந்தன் கேட்டான். அதற்கு அம்மாது, "ஐயா, யான் ஓர் அரக்கியாவேன். நாடோறும் குழந்தைகளையே கொன்று தின்கின்ற தொழிலை யான் மேற்கொண்டுளேன். இன்று தம்முடைய மைந்தன் இறைச்சியைத்

தின்ன இச்சித்துத் தம் அரண்மனையில் நுழைந்து நும்மகனைத் திருடிக் கொன்றேன்,'' என்று பதிலுரைத்தாள். அம்மொழியில் அரசனுக்குச் சிறிதும் நம்பிக்கை யிலது. மறுபடியும் அம் மங்கையின் முகத்தை அவ்வன் நன்றாய் உற்றுப் பார்த்தான்; அம் மாதரசி கொலைத் தொழில் புரிந்தவள் அல்லள் என்பதை நன்கு அறிந்தான்; அந்த அரசியை நோக்கி, ''அம்மையே, உண்மையை ஒளிக்காமல் சொல்,'' என்று வினவினான். அப்பொழுதும் சந்திரமதி, தான் ஓர் அரக்கி என்றும், குழந்தைகளைக் கொன்று தின்கிறவள் என்றும் முன்பு சொன்ன வண்ணமே கூறினாள். பொழுது நன்றாய் விடிந்தது. தன்னிடம் வந்து நின்ற அமைச்சர் முகங்களை நோக்கிச் செயலற்றுத் திகைத்து நின்றான் காசி மன்னன்.

அமைச்சர் அனைவரும், ''பெருமானே, பிள்ளையைக் கொன்றவள் தானேஎன்று அம் மங்கை ஒத்துக்கொள்கின்றாள். நாம் என்ன செய்யக் கூடும்? அம்மாது ஒத்துக்கொள்ளும் குற்றத்திற்குத் தக்க தண்டனையை நாம் விதிக்க வேண்டியவரா யிருக்கின்றோம். கொலை புரிந்தவரைக் கொல்லுதலே தக்க நீதியாகும்,'' என்று அரசனைப் பார்த்துப் பகர்ந்தனர். உடனே அவ் வேந்தன், ''அப்படியாயின் யான் என்ன செய்யக் கூடும்? கடவுள் அன்று விதித்த வண்ணமே எல்

லாம் நடைபெறுகின்றன. வீரவாகுவை யழைத்து இம்மங்கையைக் கொண்டுபோய்ச் சுடலையிற் கொல்லுமாறு செய்ம்மின்,'' என்று அமைச்சரை நோக்கிக் கூறி அரண்மனைக்குட் சென்றான்.

வீரவாகுவை யழைத்து மன்னனுடைய கட்டளையை அமைச்சர் தெரிவித்தனர். உடனே அந்த வீரவாகு, சந்திரமதியைக் கொண்டு போய்ச் சுடுகாட்டில் வெட்டித் தள்ளுமாறு தன் அடிமைக்காரனாகிய அரிச்சந்திரனுக்குக் கட்டளை யிட்டுத் தன் கையிலிருந்த நீண்ட வாளை யும் அவனிடம் கொடுத்தான். வாளைப்பெற்றுத் தன் தலைவன் ஆணைப்படி அயோத்தி மன்னன், குற்ற மற்ற தன் மனைவியை மணிக்கயிற்றால் கட்டித் தடியால் தள்ளிக் காசியம்பதியின் தெருக்கள் வழியே மயானத்தை நோக்கிச் சென்றான். அச்செயலைக் கண்டு அந்நகர மாந்தர் எல்லாரும் மிக்க வியப்பையும் துக்கத்தை யும் அடைந்து, பற்பலவாறு பேசி மனம் நொந்து திகைத்தனர்.

சிறிது நேரத்திற்குள் அரிச்சந்திரன் தன் மனைவியோடு சுடலை யடைந்தான். அவ்வேளை மேலுலகத் திருந்த இந்திரன், வசிட்டர், நாரதர் முதலிய முனிவருடன், வானவர் பலர் தன்னைச் சுற்றிவரப் புறப்பட்டு, அரிச்சந்திரனு டைய பெருந்தன்மையைக் காண விரும்பிக்

காசிமா நகரத்துச் சுடுகாட்டிற்கு நேரே சென்று வானகத்தில் தங்கி யிருந்தான். கணக்கற்ற விண்ணவர் அவ்விடம் சென்று கும்பலாகக் கூடிப் பற்பலவாறு பேசிக் கொண்டிருந்தனர். விசுவாமித்திர முனிவன் திடீரென அச்சுடலையினிடம் தோன்றி அரிச்சந்திரனை நோக்கி, "மன்ன, நீ ஏன் இத்தகைய துன்பங்களுக்குள் அகப்பட்டு வருந்த வேண்டும்? முன்பு எனக்கு அளித்த நாட்டைக் கொடுத்ததில்லை என்று இப்பொழுதாயினும் நீ சொல்லி விடு. உன்னுடைய துன்பங்களெல்லாம் தொலையும்; இழந்த நாட்டைத் திரும்பவும் பெற்று இனிதாக நீ அரசாண் டிருக்கலாம்," என்று கூறினன்.

அம்முனிவனைப் பார்த்து அரசன், "கலைகளெல்லாவற்றையும் படித்தறிந்த முனிவராகிய நீர் இவ்வாறு சொல்லத்தகுமா? புலையனும் விரும்பாத புன் புலால் நிறைந்த இவ்வுடம்பு எப்பொழுதும் நிலைத்திருப்ப தென்றெண்ணி அறிவிழந்து உயிரினும் மிகச் சிறந்ததாகிய உண்மை பேசுதலினின்று நான் எக்காலத்திலும் தவறேன்; நாடு நகரங்களை இழந்தேன்; படைத்திருந்த செல்வங்களைத் துறந்தேன்; அருமையாய்ப் பெற்று வளர்த்த மைந்தனையும் இழந்தேன்; இனி, எனக்குரியதாகிய பேரின்ப வீட்டை இழக்கினும் மெய் பேசும் உயர்ந்த அறநெறியினின்று தவறமாட்டேன்," என்று முனி

வனுடைய மனம் திடுக்கிட்டு அஞ்சுமாறு சினத்துடன் உரைத்தான். யாதும் பேச வகையின்றி மிக்க வெட்கத்துடன் கௌசிகன் அவ்விடத்தினின்று அப்புறம் சென்றான்.

அயோத்தி வேந்தன், தன் மனைவியை நோக்கி, "நாயகி, நீ அஞ்சாதே; நாடோறும் வழிபடும் கடவுளை மனத்திற் கொண்டு நீ கிழக்குத் திக்கை நோக்கித் தலைகுனிந்து நிற்பாயாக," என்று சொன்னான். தன் கணவன் கட்டளைக்கிணங்க அம் மங்கை நடந்தாள். உடனே அவ்வரசன், "உலகத்திலுள்ள எல்லா உயிர்க்கும் ஈசனே முதன்மையானவன் என்பதும், அக் கடவுளுடைய மொழியே சிறந்த மறையாகுமென்பதும், அம்மறையில் விளங்கும் அறங்கள் பலவற்றினும் உண்மை பேசுதலே சாலச் சிறந்ததாகுமென்பதும், அவ்வுண்மை பேசுதலையே யான் நோன்பாகக் கொண்டவன் என்பதும், கற்பிற் சிறந்த இம்மங்கை என்னையே கண்கண்ட கடவுள் என்று உறுதியாகக்கொண்டு நடக்கின்றவள் என்பதும் உண்மையாயின், இப்பொழுது அவ்வுண்மையே தலைகாக்கக் கடவது," என்று சொல்லித் தன் கையிலிருந்த வாளை உயர வெடுத்துச் சந்திரமதியின் கழுத்தில் ஓங்கி வீசினான். அது திருமணக் காலத்திற் போட்ட பூமாலையைப் போல் அம் மங்கையின் கழுத்தில் விளங்கியது. அதைக் கண்டு

அரிச்சந்திரன் திடுக்கிட்டு நின்றான். வானகத்தில் மறைந்து பார்த்திருந்த விண்ணவர் பலரும், ஆரவாரித்து அரிச்சந்திரன் மீதும் சந்திரமதியின் மீதும் மலர்களைத் தூவிக் களித்தனர்; துந்துபி, எக்காளம், பேரிகை முதலிய வாத்தியங்களை முழக்கினர். "அரிச்சந்திர, நில், நில்; தோற்றவன் யானே; வென்றவர் வசிட்டரே," என்று சொல்லிக் கொண்டே கௌசிக முனிவன் ஓடிப்போய் அரிச்சந்திரன் எதிரில் நின்றான். முப்பெருங் கடவுளரும் அரிச்சந்திரன் எதிரில் தோன்றிக் காட்சி தந்து ஆசி கூறி, அவ்வரசன் கொண்டிருந்த உண்மை நெறியினுடைய உயர்வைப் புகழ்ந்து இறந்து பட்ட மைந்தர் இருவரையும் உயிர்பெற்றெழச் செய்து மறைந்தருளினர்.

வானகத் திருந்த வசிட்டர் இந்திரன் முதலியோர் பலரும், அரிச்சந்திரன் முன்னர்த் தோன்றி ஆசி வழங்கி நின்றனர். சுடலையில் நடந்த செய்தி விரைவிற் காசிமாநகரம் முழுவதும் பரவியது. காசி மன்னன், தன் மனைவி, அமைச்சர் முதலியோருடன் அரிச்சந்திரனிடம் ஓடிச் சென்றான். காசி நகரத்து மக்கள் எல்லாரும் அங்ஙனமே அயோத்தி வேந்தனிடம் போயினர். அவ்வாறு அங்கு வந்து சேர்ந்த பலர்க்கும் இடையில் நின்று விசுவாமித்திர முனிவன், முன்பு இந்திரன் அவை

யில் தனக்கும் வசிட்டருக்கும் உண்டான வாக்குறுதியைக் குறித்துச் சொல்லி, அரிச்சந்திரனுடைய உண்மை நெறியை உலகினர் அனைவரும் அறியத் தான் இங்ஙனம் செய்ததையும், அச்சுடுகாடு யாகசாலை யாகுமென்பதையும், வீரவாகு அறக்கடவுள் என்பதையும் விளங்கக் கூறி மெய்ப்பித்துத் தன் தவத்திற் பாதியை அரிச்சந்திரனுக்கு முறைப்படி வழங்கி, அம்மன்னனுடைய நாடு நகரங்களையும் எல்லாச் செல்வங்களையும் கொடுத்தனன்.

தான் அளித்த நாடு நகரம் முதலியவற்றை முனிவனிடமிருந்து பெற்றுக்கொள்ள அரிச்சந்திரன் உடன்பட்டிலன். இந்திரன் வசிட்டர் காசி வேந்தன் முதலியோர் பல அறநெறிகளையெடுத்துச் சொல்லி அயோத்தி மன்னன் இழந்தநாடு நகரங்களைப் பெறுமாறு செய்தனர். கடவுளர் அனைவரும் அரிச்சந்திரனை வாழ்த்தி வானக வழியே சென்றனர். அரிச்சந்திரனோடு சந்திரமதி தேவதாசன் முதலியோரைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று காசி மன்னன், அன்று சிறந்த விருந்தொன்றை யளித்தான். மறுநாட் காலை வசிட்டர், காசி வேந்தன் முதலியோர் அரிச்சந்திரனை யழைத்து அயோத்தியை நாடிச் சென்றனர்; நல்லதொரு நாளில் அரிச்சந்திரனை அரியணை மீது அமரச் செய்து மணி முடி சூட்டி, அவன் கையிற் செங்கோலைக்

கொடுத்து வாழ்த்திக் களித்தனர். உலகமுழுவதிலும் அரிச்சந்திரனுடைய புகழ் யாதினும் பெரிதாய்ப் பரவியது. மக்கள் எல்லாரும் அம்மன்னனை மிகப் புகழ்ந்து வாழ்த்தி மகிழ்ந்தனர். எக்காலத்தும் தன் புகழ் நிலைத்திருக்க அரிச்சந்திரன் இனிதாகச் செங்கோல் செலுத்தி மிக்க இன்பத்துடன் வாழ்ந்திருந்தான்.

59008

Printed at The Royal Printing Works, Mount Road, Madras.